Sivalingam.
's Books Collections"
0, Buntings Lane.
alba.
065-2224712.

தொகுதி : 19

இலக்கம் : 01



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி : 19

இலக்கம் : 01

2014

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மட்டக்களப்பு.

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 55, லேடி மன்னிங் டிறைவ்,
மட்டக்களப்பு.

தொலைபேசி இல.: 065-2223297

Fax No.: 065-2224657 e-mail : suriyaw@slt.lk

**THE WOMAN - A Journal Published by**
**Suriya Women's Development Centre,**
**No.55, Lady Manning Drive,**
**Batticaloa, Sri Lanka.**

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | விஜயலட்சுமி சேகர் |
| முன் அட்டை | :- | Michelangelo pistoletto's Statue (Italian Painter) |
| அட்டை வடிவமைப்பு | :- | T. சங்கர் |
| கணினி வடிவமைப்பு | :- | சுபாஜெனி சங்கர் – |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | :- | 100/= |

உங்களுடன் .......

மற்றுமொரு இதழின் ஊடாக தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். பெண்களின் தொழில்களையும் அதனூடாக வரும் விளைவுகளையும் இவ்விதழ் அதிகம் பேசுகின்றது. ஏனெனில் முடிவில் முத்துக்களை மட்டுமே பார்த்துப் பழகிய கண்களில் முத்துமுத்தாய் இடறும் வேர்வைத் திட்டுக்களின் பாசைகளை விளங்கிக் கொள்ளலின் அவசியத்தின் முடிவு இவ் வெளியீடாகும்.

இது சார்ந்த வெளியீட்டிற்காக சுபாஜினி ராஜேந்திரம் அவர்கள் எமக்கு உதவ முன்வந்தார். எனினும் அவர் வெளியிட்ட "பெண்" சஞ்சிகையில் ஏற்பட்ட அதிக திருத்தங்கள் காரணமாக அவ் இதழை விநியோகிக்க முடியாமல் போனது. எனினும் அவர் முயற்சியின் பயனாய் பெறப்பட்ட ஆக்கபூர்வமான ஆக்கங்களை {"நான் ஏதாவது சாதிக்க வேண்டும் என நினைக்கின்றேன். "அரசியல் பங்கேற்பில் எனது அனுபவம்", "சுவடுகள்"– ("பெண்களைப் புரிந்துகொள்கையில் அன்றும் இன்றும்" என வெளியானது), சமகாலத்தில் பெண்களின் முன்னேற்றமும்........"} தொடரும் இப் பெண் இதழில் நன்றியுடன் வெளியிடுகிறோம்.

கனிகளை உண்டு விதைகளைப் பார்த்து அம் "மரம்" பற்றிய வர்ணனைகள் புனையும் எம் கற்பனை உலகின் சக்கரங்களில் சிக்க முடியாது நாம் நேரடியாக வேர்களையே தரிசிக்கின்றோம். இங்கு ஈரம் இருக்கும் அதனுடன் சேறும் இருக்கும், மண் வாசனையும் இருக்கும். இதற்கூடாக வரும் மானிட வாசனைகளைச் சுமந்தே பெண் வருகிறாள்.

அன்புடன் ....

ஆசிரியை

# உள்ளே....

நான் ஏதாவது சாதிக்க வேண்டும் ...

அம்மாவுக்கு ஒரு கடிதம்

தொழிலுக்குச் செல்லும் பெண்கள் ...

பாடுபடும் பெண்ணே!

காத்திருப்பு

அரசியல் பங்கேற்பில் எனது அனுபவம் ...

சுவடுகள்

சமகாலத்தில் பெண்களின் முன்னேற்றம்

இது இவர்களின் கதை

இன்றைய தமிழ் சினிமாவும் பெண்கள் ...

எழுபதாகுது ....!

பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக ...

புழுதி


சிந்தியுங்கள்...

யானை செத்தாலும் ஆயிரம் ...

ஆகாயக் குளங்கள்

வாசகர் கடிதங்கள்

# நான் ஏதாவது சாதிக்கவேண்டும் என்று நினைக்கின்றேன்



ஓவியம் : - கமலா வாசுகி

"முன்னரெல்லாம் என்னுடைய கிராமத்தில் வாழ்கின்றவர்கள் மற்றும் உறவினர்கள் என்னுடைய வலது குறைவினை எங்கள் குடும்பம் செய்த பாவம் என்பதுடன் யாராவது எனது வீட்டைத் தேடிவருபவர்களுக்கு "நொண்டிப் பிள்ளையின் வீடா? என்றே அடையாளம் காட்டுவார்கள். ஆனால், இப்போது தர்மினியின் வீடு அல்லது 'யுத்' கிளப்பில் உள்ள பிள்ளையின் வீடு என அடையாளம் காட்டுகின்றனர்"

என்னால் எங்கேயும் போகலாம் எந்த வேலையும் செய்யலாம் எதுவும் முடியும் என்ற துணிச்சல் இப்போது வந்துள்ளது. நான் ஏதாவது சாதிக்கவேண்டும் என்று நினைக்கின்றேன். தோற்றுப்போய் விட்டதாக ஏற்கெனவே நம்பிக்கை யற்று இருந்த நான் இப்போது எனக்குக் கிடைத்துள்ள இந்த வாழ்க்கை என்ற படியில் ஒரு போதும் தோற்கமாட்டேன் எனும் மன உறுதி பெற்றுள்ளேன். "இயலாமை என்ற போர்வைக்குள் வாழ்ந்த நான், இயலும் என்ற உந்துதல் என் அடிமனதில் நிலைகொண்டிருப்பதை உணர்கின் றேன்"என்று கூறுகிறார் அக்கரைப்பற்று வாச்சிக்குடாவைச் சேர்ந்த 19 வயதையுடைய தர்மராஜா தர்மினி. இவர் பிறப்பிலிருந்தே வலக் கால் ஊனமான இளம் பெண் ஆவார்.

க.பொ.த சாதாரண தரம் வரை படித்திருக்கிறார். வீட்டில் மூத்தபிள்ளை. தந்தை மேசன் கூலியாக வேலை செய்பவர். தாய் களவெட்டியில் (வயல் அறுவடை செய்த பின்னர்) நெல் பொறுக்கப் போவார். 17 வயதான தம்பி வினோதன் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு கம்மாலை வேலைக்குப் போகின்றான். 15 வயதான தங்கச்சி தட்சாயினி 8ம் தரத்தில் படித்துக் கொண்டி ருக்கிறாள். தந்தையும் தம்பியும் மது பழக்கத்திற்கு அடிமையான வர்கள். தர்மினிக்கு புத்தி தெரிந்த காலத்திலிருந்தே அவரது அப்பா மது போதைக்கு அடிமையானவராகவே உள்ளார். தன்னுடைய இளைய மகனையும் அவரைப் போலவே அவ் அடிமைத் தனத்திற்கு ஆளாக்குவதில் அவர் பெரும் பங்காற்றி வருகிறார். வலது குறைவு, வறுமை, குடும்பப் பிரச்சனை என்பதில் உழன்று கொண்டிருந்த தர்மினிக்கு வீட்டை விட்டு வெளிச் சூழலை சிந்தித்துப் பார்க்க முடியாமல் இருந்தது.

சமூகம் தர்மினியை எப்படியானாலும் பார்க்கலாம். ஆனால் தர்மினி தனக்குத்தானே போட்டி ருந்த மதிப்பெண்கள் அவரே அவருக்குச் சவாலாக அமைந்தி ருந்தது. நான் வலது குறைந்த பெண், நான் வறுமைக்குட் பட்டவள், எனக்கு சமூகத்தில் எல்லோருக்கும் நடைபெறுவது போல் திருமணம் நடக்காது, என்னை யார் மதிப்பார்? என்னால் என்ன செய்ய முடியும்? இப்படிப்

பல... சாதாரணமாகப் பெண்ணாகப் பிறக்கின்ற ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஒரு வட்டத்தைப் போட்டு வாழ்கின்ற சூழலில் தர்மினியின் குறைபாடு என்பது இன்னும் அவரை பாதித்திருப்பதில் தவறு இல்லை என்று கூறலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தின்போதுதான் தர்மினி வலது குறைந்த நபர்களுடனான அபிவிருத்தி வலையமைப்பினால் நடைமுறைப் படுத்தப்படும் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் 2011 ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டார். தர்மினியை தன்னுடைய மனநிலையிலிருந்து வெளிக்கொணர்வதற்கு குறிப்பிட்டகாலம் செலவழிக்க வேண்டியதாக இருந்தது. முதலில் சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் வாழ்வதற்குரிய உரிமை உள்ளது என்பதை புரிந்துகொண்ட தர்மினி அதைப் பெற்றுக்கொள்வதில் தன்னுடைய பங்கு என்ன என்பதையும் புரிந்துகொண்டார். காலப்போக்கில் தன்னுடைய மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக தையல் பயிற்சிக்காக நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தில் இணைந்துகொண்டு தொழிலுக்கான பயிற்சியை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாது சமூகத்தில் தனக்குண்டான நம்பகத்தன்மையை ஏற்படுத்திக்கொண்டார். அத்துடன் தனக்கான புதிய உறவுகளை (நண்பர்கள்) ஏற்படுத்திக் கொண்டார்.

"முன்னரெல்லாம் என்னுடைய கிராமத் தில் வாழ்கின்றவர்கள் மற்றும் உறவினர்கள் என்னுடைய வலது குறைவினை எங்கள் குடும்பம் செய்த பாவம் என்பதுடன் யாராவது எனது வீட்டைத் தேடிவருபவர்களுக்கு நொண்டிப் பிள்ளையின் வீடா? என்று அடையாளம் காட்டுவார்கள். ஆனால், இப்போது தர்மினியின் வீடு அல்லது 'யுத்' கிளப்பில் உள்ள பிள்ளையின் வீடு என அடையாளம் காட்டுகின்றனர்" என்கிறார்.

இவ்வாறு தர்மினியின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் உருவாகத் தொடங்கியது. தன்னு



டைய குறைகளை முற்றாக மறக்க ஆரம்பித்தார். குடும்பப் பொறுப்பைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளத் தொடங்கினார். தர்மினியின் இவ் ஒவ்வொரு மாற்றத்திற்கும் செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் உரம் போடுவதாக அமைந் திருந்தன. தர்மினியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் உதவிகள் வழங்கப்பட்டதுடன் வாய்ப்புக்களை அவர் பெற்றுக்கொள்வதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கும் தவறவில்லை. சிறப்பாகப் பயிற்சி நெறியை நிறைவுசெய்த தர்மினி நிரந்தர வேலை கிடைக்கும்வரை புத்தகக் கடை ஒன்றில் வேலைசெய்தார். 3 மாத காலத்திற்குள் ஆடைத் தொழிற்சாலையில் நேர்முகத் தேர்வின் மூலம் தொழில் பெற்றார். அதுமாத்திரமன்றி தர்மினி ஆலையடிவேம்பு இளைஞர் கழகத்திலும் சிறப்பாகச் செயற்படுகின்ற அங்கத்தவர் என்ற வரிசையில் காணப்படுகின்றார்.

தற்போது முகமலர்சியுடன் காணப் படுகின்ற தர்மினியின் நம்பிக்கையான பேச்சு, குறிக்கோள், வாழ்நிலை பற்றிய பெரிய கனவு, தீர்மானம் எடுத்தலில் தனது பங்கினை உணர்ந்து செயற்படும் திறன் என்பவை அவரது எதிர்காலத்தை மேலும் மேலும் வலுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அனுலா ஆறுமுகம்

# அம்மாவுக்கு ஒரு கடிதம்



நெஞ்சமெல்லாம் நீ இருக்க – அம்மா நீ
நீண்ட தூரம் போனதென்ன?
கொஞ்சமாய் சோறு தந்தாலும் - அம்மா நீ
கூட இருக்கனும் போல இருக்குதம்மா

நீ போன நாள் இருந்து – அடுப்படியே
தஞ்சமென்று ஆனேன் அம்மா
ஆக்கிப் போட்டு கொடுத்தால்தான்
அப்பா அவசரமாக சாப்பிடுறார்.

ஊர்ப் புதினம் பார்க்கப் போற – அண்ணன்
உடுப்புக் கழுவி போடாவிட்டால்
காதப் பிடிச்சி திருகிறான் - அப்படியே
கவனமாக வீட்டப்பார் எனக் கத்துறான்

அம்மா நீ எங்களுக்காக
அனுப்புற காசெல்லாம் ............
வீணாகப் போகுதம்மா – அம்மா
உன் உழைப்பு கண்ணீராகப்
போகுதம்மா.............

வீட்டுவேலை செய்து – பள்ளிக்கு
தாமதமாய்ப் போகயிலே.......
ஒருபாடம் முடிஞ்சிடும் - ஆனால்
மூளையில் ஒன்றும் ஏறுவதில்லை அம்மா...

தங்கச்சிய நிறுக்கப் போக – பள்ளிக்கு
போகாம நான் நிற்கயிலே
அன்றைய பாடத்த பார்த்தெழுத
அக்கறையும் வருவதில்லை அம்மா......

நான் பருவமடையும் போது – அம்மா நீ
பக்கத்தில் இருக்கனும் என
எனக்கு ஆசையாய் இருக்குதம்மா
படிப்பும் நின்றுடும் என பயமாய்
இருக்குதம்மா.......

அம்மா எழுதுறத்துக்கு இன்னும்
இருக்குதம்மா
எழுதமுடியல.....
கண்ணீரும் வடியுதம்மா கடிதமும்
நனையுதம்மா
காத்திருப்பேன் அம்மா நீ ஓடி
வருவாயென...

**இராமையா அருள்ஜோதி**



# தொழிலுக்குச் செல்லும் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

இறைவன் படைத்த சாதிகள் இரண்டு. ஒன்று ஆண் சாதி மற்றையது பெண் சாதி. இதனடிப்படையில் ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் அதிலுள்ள ஆண் பெண் இரு பாலாரும் சகல துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டுமென்பது முற்போக்கு வாதிகளின் கருத்தாகும். இதன் முக்கியத்துவத்தை அறிந்த ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் உரிமைச் சட்டங்களை நிறைவேற்றின. 1948 இல் மனித உரிமைகள் மீதான பிரகடனம் 1979இல் பெண்களுக்கெதிரான எல்லா விதமான பாராபட்சங்களையும் இல்லாதொழித்தல் மீதான சமவாயம் உருவானது.

இலங்கை அரசு 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பில் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை வழங்கியது. அதன்பின் பெண்கள் - கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்தனர்.

இதனடிப்படையில் இன்றைய கால கட்டத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஆராயவேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. அப்பிரச்சனைகள் இனங்காணப்படுமிடத்தே அவற்றிற்கான, அதனை இல்லாதொழிப் பதற்கான தீர்வுத் திட்டங்களை முன்வைக்கக் கூடியதாகயிருக்கும்.

பெண்கள் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளையும் மிகத் துல்லியமாக ஆராய்வது முக்கியம். இவை உழைப்புச் சுரண்டல், உரிமைச் சுரண்டல், பாதுகாப்புச் சுரண்டல் எனப் பல வழிமுறைகளில் காணப்படு கின்றன.

### ❖ இரட்டைச் சுமையைத் தாங்க வேண்டிய பாரிய பொறுப்புடமை?

வீட்டில் திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் பெண்களுக்கென பல கடமைகளை சமூகம் வகுத்துள்ளது. கணவனை கரிசனையுடன் தாங்குவது, பிள்ளைப் பராமரிப்பு, ஏனைய அங்கத்தவர்களை காக்கவேண்டிய நிலை இவ்வாறாக பல. அதேநேரத்தில் வேலைச் சுமைகளையும் தாங்குவதென்பது பாரியசுமை. இவ்வாறாக குடும்ப வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என இரு வேறுபட்ட கடமைகளை கரிசனையோடு ஒரே சீரான தன்மையில் ஒரே நேரத்தில் கொண்டு செல்லவதென்பது மிகவும் கடினம். இதற்கிடையில் கணவனின் புரிந்துணர் வற்றதன்மைகள் ஏற்படுமாயின் அவளது வாழ்க்கையின் கதியே கேள்விக்குறியாகி விடும்.

### ❖ குடும்பச்சீர்குலைவு

மேற்கூறப்பட்ட இரட்டைச் சுமைகளை சுமக்க வேண்டிய நிலையில் உள அழுத்தம் அவளுக்கு ஏற்படுகின்றது. இதனை அக் குடும்

பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. மற்றும் வேலைத்தளங்களில் சக ஆண் ஊழியர்களோடு வேலை செய்கையில் கணவனுக்கு ஏற்படும் புரிந்துணர்வற்ற நிலை குடும்பங்களிலே மனஸ்தாபங்கள், சந்தேகங்கள் என்பன ஏற்படுவதற்கும் விவாகரததிற்கும் வழியமைக்கின்றது. பெண்கள் எவ்வளவு கற்றிருந்தாலும், உயர் பதவியிலிருந்தாலும் இன்றும் குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் அவளது விருப்பு, வெறுப்புக்கள் இரண்டாம் பட்சமாகவே மதிக்கப்படுகின்றது.

### ❖ பிள்ளைகளை சரிவர பராமரிப்பதிலிலேற்படும் சிக்கலும் சவால்களும்

பொதுவாக எமது சமூகத்தில் ஆண், பெண் இருவரும் வேலைக்குச் செல்கின்றபோது பிள்ளைகள் சரியான முறையில் வழிகாட்டப்படாமல் இருந்தால், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டால், கல்வியில் முன்னேற்றம் காணாப்படாதிருந்தால், மேலும் பெற்றோரின் அன்பும், ஆதரவும், அரவணைப்பும் கிடைக்காமல் உளத்தாக்கத்திற்கு உள்ளானால் பெண்கள் மட்டுமே பொறுப்புக் கூற வேண்டியவர்களாகிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குடும்ப அங்கத்தவர்கள் பெண்களின் தொழிலுக்கு எதிர்ப்பு காட்டும் நிலையே குடும்பங்களில் காணப்படுகின்றது.

### ❖ உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை

சமமான மதிப்புள்ள தொழில்களை பெண்கள் வேலைத்தளங்களில் செய்கின்றபோதும் அவர்களுக்கு சமமான ஊதியம் வழங்கப்படுவதில்லை. இப் பெண்களின் உழைப்பினை மூலதனமாக் கொண்டு குறிப்பிட்ட விற்பனை நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் நன்மையடைகின்றன. பெரும்பாலான பெண்கள் குடும்பத்தின் வறுமையை மனதில் கொண்டு வேலை தேடுவதால் குறைந்த வருவாயில் இவர்களை வேலைக்கமர்த்துகின்றனர். இவ்வாறு உழைப்புச் சுரண்டலின் மத்தியிலும் பெண்கள் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளனர்.

### பாலியல் துன்புறுத்தல்கள்

வேலைக்குச் செல்கின்ற பெண்கள் அநுபவிக்கின்ற மற்றுமொரு இம்சை பாலியல் துன்புறுத்தல்களாகும். பெண்களின் அறியாமை, வறுமை என்பன சில அரக்க குணம் படைத்த ஆண்களுக்குச் சாதகமாக அமைந்துவிடுகின்றன. இது பெண்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்து விடுகின்றது. வேலைத் தளங்களிலுள்ள ஊழியர்களாலும், மேலதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் இசைவான வேலைச் சூழலை இடர்படுத்துகின்றன. சிலர் அவ்வாறானவர்களின் பண பலம், உடற் பலம் ஆகிய வற்றிற்கு அடிபணிந்து போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறின்றி முறைப்பாடு செய்யும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்கான தகுந்த விசாரணைகள் செய்வது குறைவு. பல விடயங்கள் பண பலத்தால் மறைக்கப்படுகின்றன. இவ்வாறான பாலியல் துன்புறுத்தல்கள் உடல், உளரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பெண்களின் உற்பத்தி திறன் பாதிக்கப்படுவதோடு, வேலைசெய்வதில் அவர்களுக்கிருக்கும் ஆர்வம், உத்வேகம் குறைவடைகின்றன. இதனால் சுமூகமான வேலைச் சூழலை பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமம் ஏற்படுகின்றது.

### ❖ பேருந்துகளில் ஏற்படும் இம்சைகள்

வேலைக்காக பெரும்பாலான பெண்கள் பேரூந்துகளில் செல்கின்றபோது மேற்கொள்ளப்படும் விரும்பத்தகாத தொடுகைகள், உரசல்கள் அவர்களுக்கு விரும்பத்தகாத வேலைச் சூழலை ஏற்படுத்துகின்றது. இந்தியாவில் ஏற்பட்ட கடந்தகால பாலியல் பலாத்காரங்கள் இதன் தாக்கத்தை எமக்கு நினைவூட்டி கதிகலங்கச் செய்கின்றன. இவ்வாறான சம்பவங்கள் வேலை மீதான அவர்களின் ஈடுபாட்டினை குறைக்கின்றது.

### ❖ குறைவான ஓய்வு, விடுமுறை

பெரும்பாலும் நகரப் பகுதிகளில் அழகு நிலையங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், கடைகள், விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் பெருந்தொகையான பெண்கள் வேலை செய்து வருகின்றனர்.

இங்கு இவர்களுக்கான வருடாந்த விடுமுறை, அமய விடுமுறைகள் மிகக் குறைவாகவே வழங்கப்படுகின்றன. அவ்வாறின்றி விடுமுறை கோரும் வேளைகளில் தமது தொழிலை இழக்கவும் நேரிடுகின்றது. இவ்வாறான குறைவான ஓய்வு, விடுமுறை அவர்களுக்கு வேலைச் சூழலை அழுத்தம் நிறைந்ததாக்கி விடுகின்றது. இதனால் மன, உடல் உளைச்சல்களுக்கு இவர்கள் ஆழாகின்றனர்.

- **பிரசவ விடுமுறை, மற்றும் மகப்பேற்றுக் கால நலன்கள்.**

பெரும்பாலும் தனியார் துறைகளில் பெண்களுக்கு வழங்கப்படும் மகப்பேற்றுக் கால விடுமுறைகள் குறைவாகவுள்ளதுடன் மகப்பேற்றுக் காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் நலன்கள், சேவைகளும் குறைவாக காணப்படுகிறன. இது சிசு மரண வீதத்தை அதிகரிப்பதுடன், கருக்கலைப்பிற்கும் இட்டுச் செல்கின்றது.

- **போதிய சுகாதார வசதிகளற்ற நிலை.**

பொதுவாக மகப்பேற்றுக் காலத்தில் சௌகரிக ஆசன அமைப்புக்கள் அற்ற தன்மை, மலசல கூட, ஓய்வறைகள் இன்மை, பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான முறைமை இன்மை போன்ற நிலைகள் பெண்களின் சுகாதார மற்றும் நலன் சார் கரிசனைகளை கேள்விக்குள்ளாக்குகின்றன.

- **உயர் பதவிகளில் பெண்களை அமர்த்துவதில் உள்ள பாரிய இடைவெளிகள்.**

பெரும்பாலான தொழில் நிறுவனங்களில் ஆண்களுக்கு சமமான வகையில் பெண்கள் கல்வியறிவினைப் பெற்றிருப்பினும் அவர்களை உயர் பதவிகளில் அமர்த்துவதில் தயக்கம் காட்டும் போக்கே காணப்படுகிறது.

- **தொழிற் சங்க நடவடிக்கைகளிலேற்படும் அசமந்தப் போக்கு**

பெண்களின் பிரத்தியேக நலன்களையும் பிரச்சனைகளையும் கண்டுகொள்ளாத தன்மைகளையே தற்காலத்து தொழிற் சங்கங்கள் கொண்டுள்ளன. இதனால் பெண்கள் சார்ந்த நலன்கள் வலியுறுத்தப்படுவதில்லை. இத்தகைய நிலை அவர்களுக்கான தொழில் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட, உத்தரவாதப் படுத்தப்பட்ட தன்மையை மழுங்கடிக்கின்றன.

- **இரவுநேர வேலைக்கமர்த்துகை.**

இவை தவிர இரவு நேரங்களில் வேலைக் கமர்த்துவதால் ஏற்படும் பாலியல் துஸ்பிரயோகம், போதிய பெண் பாதுகாப்பாளர் அற்ற தன்மை, இரவு நேர வேலைக் கொடுப்பனவு குறைவு, போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்வதுடன், சமத்துவமற்ற நடத்துகை, மேலதிகக் கொடுப்பனவுகளில் சமச்சீரற்ற தன்மை போன்ற பிரச்சனைகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு அரச, அரசசார்பற்ற ஆணாதிக்க தொழிற் சங்கங்களும், சட்டவாக்க, நிறைவேற்றுத் துறையின் குறைபாடுகள், சுதந்திரமற்ற, கால தாமதமான நீதிமன்ற முறைகளும் கலாசார, சமய பாரம்பரிய எண்ணக் கருக்களும் காரணமாக அமைந்து விடுகின்றன.

பெண்களுக்கு இழைக்கப்படும் தொழில் வன்முறையானது பெண்களுக்கான தனிப்பட்ட வன்முறையல்ல. அது மனித உரிமைக்கான வன்முறையாகும். இவைகள் மனிதாபிமானமற்ற நடத்தைக் கோலங்களையே காட்டுகின்றன. ஆகவே சமூக விழிப்புணர்வூட்டல், பிள்ளைப் பராமரிப்பு, சுகாதார நலன்களை ஏற்படுத்தல், வேலைத் தளங்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் பலாத்காரத்திற்கு எதிரான புதிய சட்டத்தினை உருவாக்கல் போன்ற ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

■ *தம்பிலுவில் ஜெகா*

# பாடுபடும் பெண்ணே!



காலை வேளைதனிலே!
காகம் கரையும் முன்னே!
காத்திருக்கும் வேலையென!
கண் விழித்தாயே

அடுப்பங்கரை வரவேற்றது
உன்னையே!
அவதி அவதியாக ஆயத்தமானாயே !
அடுப்படி வேலைகளுக்கே – நீயும்
அடிமையானாயே!

கட்டிலில் மறுபக்கம் இருந்தே!
கண் சிமிட்டிய பிஞ்சு மகனை
கைநீட்டி அணைத்தாயே!
கொஞ்சிக் குலவ
நொடிப்பொழுதுமின்றி தவித்தாயே!

கண்ணே! மணியே! கலங்காதே!
அந்திசாயும் வேளைதனில்
வந்துன்னை அரவணைப்பேனே!
காலம் தாழ்த்தாது கடமை முடித்தாயே!


அலுவலகம் என்ன பெண்ணுக்கே!
அரவணைப்பு இடமா!
வேலைகள் உன்னையே!
வெகுவாக நாடினவே!

அந்திமாலைப் பொழுதினிலே
அடுக்கடுக்கான வேலைகளையே!
அடுக்கிக் கொண்ட சிந்தனையுடனே!
அடைந்தாள் வீட்டினையே

சுழல் காற்றுப் போல்
சுற்றிவளைத்தாள் வீட்டினையே!
முடிவற்றது முச்சுமை வேலைகள்
எல்லாமே!
முடமானது பாதங்கள் இரண்டுமே!

**P. ஜெனிதா**
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
நாவிதன் வெளி

# காத்திருப்பு...!




வறுமை கணவனைவிட அவளை
வன்முறை செய்கின்றது
பட்டினியிருப்பது பழகிவிட்டது
அவளுக்கு

மூடிய வலைகளை
கிழித் தெறிய முயற்சிப்பாள்
எவ்வளவு காலந்தான்
'பொறுமையின் சிகரம்' எனும்
ஆண்களின் பொறியினுள்
அடைபட்டுக் கொள்வாள்

காலம் சென்றாலும்
மாறவில்லை கஸ்டங்கள்
'காத்திருப்பு' காதலர்களுக்குத்தான்
சுகம்

தொலை தூரம் சென்றாள்
பொய்களை உண்மையென
கற்பூரத்தில் மட்டும் சத்தியம்
செய்யாத கயவர்களை
நம்பி
இரண்டு மாதங்கள்
மூன்று மாதங்கள்,

பிள்ளைகளுக்காக பணம்
வந்தது வீடு தேடி.

பிறகு அதுவும் இல்லை
பல ரக பேச்சுகள்
மயானத்தில்
உறங்கி கிடந்த பிணங்களும்
பேசியது புரளி .

"அம்மா வருவாவு"
எனும் பாடத்தை
மீண்டும் மீண்டும்
படித்துக் கொள்கின்றனர்
அவளின் பிஞ்சு உள்ளங்கள்

R. ரேவதி

# அரசியல் பங்கேற்பில் எனது அனுபவம்...

"நான் வெற்றி பெற்றிருந்தாலும் பிரதேச அமர்வுகளில் நான் ஒரு பெண் என்ற காரணத்தினால் அரசியலில் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளமை தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாக திட்டங்களை ஆதரிக்கும் ஒரு நபராக ஆண்களுக்கு கையுயர்த்தவே பெண்களைப் பயன்படுத்துகின்றார்கள்"

நான் குமாரவேலி லலித்குலநாயக்க அம்பாறை மாவட்டத்தில் லகுல பிரதேச செயலகப் பிரிவில் பாணமையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன். பெண்ணாக இருந்து சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் அக்கறையுடன், அர்ப்பணிப்புடனும் தொழிற்படும் நான் இங்கு எழுத்துக்களினூடாக எனது அனுபவத்தை பெண் என்ற நோக்குடன் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது ஆரம்பக் கல்வியினை பாணமை மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியினை மொனறாகலை 'மகாநாம' மத்திய கல்லூரியிலும் பயின்றேன். சிறுவயதிலிருந்தே பல சிறுவர் அமைப்புக்களில் தலைமை தாங்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. குறிப்பாக எனக்கு 10 வயதாக இருக்கும் வேளையில் தற்போதைய 'சனச வங்கியின்' ஸ்தாபக தலைவரான தேசபந்து "கிரிவந்தினிய" அவர்களால் உருவாக்கப்பட்ட 'ஜாதிக்க உருமய' போசத் சிறுவர் கழகத்தில் தெரிவுசெய்யப்பட்டு சமய, சமூக விழிப்புணர்வு மற்றும் சிறுவர் நல்லொழுக்கம் தொடர்பான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டமை எனது வாழ்நாளில் மிக முக்கியமான காலகட்டமாகும். இக்காலத்தில் நான் ஓர் அமைப்பினை தலைமை தாங்கி வழிநடத்தக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தினைப் பெற்றிருந்தேன். இதுவே பின்னால் எனக்கு சமூகநலன் தொடர்பான வேலைத் திட்டங்களை இலகுவாகச் செய்வதற்கு உறு துணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

பாடசாலைக் காலங்களில் விளையாட்டு, பேச்சு போன்றவற்றில் மிகத் திறமை காட்டிய நான் மாவட்ட மட்டத்தில் பல தடவைகள் பரிசில்களையும் பெற்றுள்ளேன். குறிப்பாக 100m, 200m, குண்டு எறிதல் போன்றவற்றில் 'சம்பியனாக' தெரிவுசெய்யப்பட்டேன். மொனறாகலை "மகாநாம" கல்லூரியில் கல்வி பயின்ற காலங்களில் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசில்களையும் பெற்றுக்கொண்டேன். பாடசாலைக் கல்வி முடிவுற்ற காலங்களில் 'மொனறாகலை' முப்பன கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்ற "மகளிர் பிரிவு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்டு மாவட்ட ரீதியில் கலந்துகொண்டமையும் என் வாழ்நாளில் மறக்க முடியாத நிலையாகும்.

இளைஞர் மன்றத் தலைவியாகப் பதவி வகித்த நான் பாணமைக்கு பின்னர் லகுல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் இளைஞர் மன்றத் தலைவியாகத் தெரிவுசெய்யப் பட்டேன். இக்காலப் பகுதியில் தேசிய ரீதியான தொடர்புகள் எனக்கு ஏற்பட்டன. 'மகறகம' தலைமைக் காரியாலயத்தினூடாகப் பல்வேறு வேலைத் திட்டங்களையும் இக் கிராமத்திற்குப் பல செய்திகளையும் கொண்டுவந்தேன். 1983 – 1989 வரையான காலகட்டத்தில் எனது கிராமத்தில் வைத்திய வசதிகள் குறைந்த காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியில்தான் நான் எனது ஊரிலுள்ள வைத்தியசாலையில் தொண்டர் அடிப்படையில் சுகாதாரச் சிற்றூழியராகக் கடமை புரிந்தேன்.

1989ம் ஆண்டு காலப்பகுதியில் கிராமத்தின் பல சங்கங்களிலும் அமைப்புக்களிலும் பல பொறுப்புக்களை ஏற்றுக் கலை கலாசார அம்சங்களை வளர்க்கும் வகையில் என் ஈடுபாடு காணப்பட்டது. இக்காலப்பகுதியில் எனது தந்தையின் வியாபாரத்திற்கு உறுதுணையாக இருந்து வியாபாரத்தை உயர்த்துவதற்கு உதவி செய்தேன். குறிப்பாக, தந்தையின் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புபட்டு நல்ல உறவினை ஏற்படுத்திக் கொண்டேன்.

1991 – 2001 வரையான காலப்பகுதியில் பொத்துவில் அக்/இர்பான் மகளிர் கல்லூரியில் தொண்டர் அடிப்படையில் சிங்கள ஆசிரியராக இருந்து கல்வித் துறைக்கும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்தேன். இவ்வேளையில் எனது தமிழ் அறிவினையும் வளர்த்துக்கொள்ள இது ஓர் சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.

2001ம் ஆண்டளவில் சிறுவர் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் கீழுள்ள மகளிர் அமைப்பின் (பாணமை தெற்கு) செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டு வறிய மற்றும் கணவனை இழந்த பெண்கள் தொடர்பாகவும் அவர்களின் பொருளாதாரத் தலைமைத்துவம் தொடர்பான பல செயற்பாடுகளைச் செய்துவந்தேன். இதன் விளைவாக லகுகலை பிரதேசத்திற்கு முழுவதுமான மகளிர் அமைப்பின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டேன். இக்காலப் பகுதியில் பல அரச மற்றும் அரசசார்பற்ற தலைவர்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இதனால் பல கூட்டங்கள் பயிற்சிகளுக்கு செல்லும் வாய்ப்புகள் எனக்கு ஏற்பட்டது. மேலும் பெண்களுக்கான சட்டம் தொடர்பான தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டு அதனை கிராம மட்டங்களுக்கு கொண்டுவருவதற்கு என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்தேன்.

2006ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்த நிகழ்வானது பல சோகங்களைத் தந்தபோதும் என் வாழ்க்கையில் பல மாற்றங்களை உண்டு பண்ணியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பான ஓர் சேவையை செய்ய எண்ணி அதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டேன். பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டு பல சேவைகளைப் பாணமைக்குக் கொண்டுவந்தேன். இதன் மூலம் பல சேவைகளை எம் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க உதவினேன்.

மக்களுக்கும் எனக்கும் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டதும் அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதும் நான் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் (WRDS) தலைவியாக இருந்த வேளையில்தான். இக் காலகட்டத்தில் பல வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள், சிக்கனக் கடன் திட்டங்கள், கிராமத்தின் பல அபிவிருத்தித் திட்டங்கள் (பாதை, கட்டிடம்) போன்றவற்றிற்கு நேரடியாகச் சென்று உண்மைத் தன்மையுடனும் சமூக அர்ப்பணிப்புடனும் வேலைசெய்தமையால் மக்களின் நன்மதிப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

மேற்படி காரணங்களால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிறந்த WRDS ஆக எமது சங்கம் தெரிவுசெய்யப்பட்டது. இதனால் பல அபிவிருத்தித் திட்டங்கள் எமக்கு நேரடியாக வந்தது. கிட்டத்தட்ட 150 குடும்பங்கள் வருமான மட்டத்தினை உயர்த்தி சுயமாக அவர்கள் வாழ்வதற்கு ஒரு வகையில் ஒத்தாசையாக இருந்திருக்கின்றேன் எனலாம். இது எனது வாழ்க்கையில்

முக்கியமான ஒரு காலகட்டமாகும். இக்காலப் பகுதியில் பெண்களின் பொருளாதார, ஆளுமை விருத்திப் பாதுகாப்பு போன்றவற்றிற்காக உழைத்தேன்.

2011ம் ஆண்டு என் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்திய ஆண்டாகும். இவ் வாண்டில் ஊரிலுள்ள அனேகமானவர்களின் விருப்பத்துக்கு அமைய உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டேன். அதில் போட்டியிட்டு அதிகள வான விருப்பு வாக்குகளைப் பெற்று லகுல பிரதேச சபையின் முதலாவது பெண் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

அரசியல் எனக்கு ஓர் புதிய அனுபவ மாகையால் அதில் நான் ஈடுபடும் வேளையில் பல சவால்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. அந்தவகையில்,

1. பெண்களின் ஆதரவு குறைந்திருந்தமை
2. முதல் இடத்தைப் பெற்றுக் கொள்வ தற்காக மற்றயை கட்சியிலுள்ள ஆண்கள் இடம் கொடுக்காமை.
3. பொருளாதாரப் பிரச்சனை.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை எதிர்கொண்டு நான் வெற்றி பெற்றிருந்தாலும் பிரதேச அமர்வுகளில் நான் ஒரு பெண் என்ற காரணத்தினால் அரசியலில் பல அசௌகரியங் களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாக திட்டங்களை ஆதரிக்கும் ஒரு நபராக ஆண்க ளுக்கு கையுயர்த்தவே பெண்களைப் பயன்படுத்து கின்றார்கள்.


இது ஒரு பாரிய சவாலாகும். அத்துடன் அபிவிருத்தி திட்டங்களில் வெளிப்படைத் தன்மை இன்மை, கூடிய முக்கியத்துவம் வழமைபோல ஒப்பந்த வேலைகளுக்குக் கொடுக்கின்றமை போன்ற நிலைமைகள் பிரதேச அரசியலில் பெண் கள் எதிர்நோக்கும் பாரிய சவாலாக நான் பார்க்கின்றேன். இருந்தபோதும் நான் மக்கள் நலத் திட்டங்கள் வருகின்றவேளை மிகச்சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எனது ஆதர வினைத் தெரிவித்துப் பிழையாக அவை மாறு கின்றவேளை பகிரங்கமாகவே எதிர்த்துள்ளேன். மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளையும் இன்று வரை செய்துகொண்டு வருகின்றேன்.

நேர்மைத்தன்மை, அர்ப்பணிப்பு உள்ள பெண்ணாகத் தொழிற்பட்ட காரணத்தினால் சிறுவர் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சி னால் மாவட்டத்தின் சிறந்த பெண்ணாகத் தெரிவு செய்யப்பட்டு (ஆளுமைமிக்க) 'அதிசிறந்த மகளிர்' ஜனாதிபதி விருது கிடைத்தமை 2011, 2012ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாணத்தின் சிறந்த மகளிர் விருது கிடைத்தமையும் எனக்கு மன மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. இன்று வரை அரசியலில் பெண்ணாக பிரதேசசபை சேவையை மனமுவந்து செய்துகொண்டு வருகின்றேன். இதற்கு ஓர் ஊடகமாக அரசியலையும் பிரேரிக்கின்றேன் எனலாம்.

'நன்றி'



# சுவடுகள்...!



> **பெண்களுக்கு வருமானம் இருக்கும் வரையே அவர்களுக்கு ஒருபலம் இருக்கும். வருமானம் குறைந்தால் குடும்பத்திலேயே மதிப்பு குறைவாக இருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.**

பெண்களை மீளமைக்கின்ற சமூக பொருளாதார முயற்சியில் நாம் உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது அம்பாறை மாவட்டத்தில் லகுகல பிரதேச செயலாளர் பிரிவில் இருப்பது பாணமை என்ற கிராமம் ஆகும். இக் கிராமத்தைப் பொறுத்த வரையில் தமிழ், சிங்கள இரு இன மக்களும் வாழ்கின்றார்கள். இங்குள்ள பெண்கள் கடந்த 30 வருட யுத்த காலமாக தமது மனதில் உருவாக்கப்பட்ட சிந்தனைகளையும், போராட்டங்களையும் மனதில் இருந்து பிரிக்க முடியாது வாழ்கிறார்கள். பாணமைக் கிராமமானது மிகவும் வறுமையானதாகவும் மற்றைய கிராமங்களுடன் கூடுதலான தொடர்புகள் அற்றும் காணப்படுகிறது. இங்கு நாம் கணவனின் அல்லது பிள்ளைகளின் உழைப்பில்தான் வாழ்ந்து வந்தோம். உற்சாகமும் தைரியமும் குறைந்தவர்களாகவும் எதற்கெடுத்தாலும் பின்வாங்கி நிற்போம். மனதில் ஒருபயம்,

தயக்கம், குரல் கொடுப்பதற்கு முன்வருவதில்லை. யாராவது அரச உயர் அதிகாரிகளுடன் பேசுவதாயின் வேறு யாராவது பேசத்தெரிந்தவர்களை அழைத்துச் சென்றுதான் பேசுவோம். பிரச்சினைகள் எது வந்தாலும் அவற்றுக்கு முகங்கொடுக்க முடியாதவர்களாகவே இருந்தோம். இவ்வாறான பின்தங்கிய நிலையை மாற்ற வேண்டும் என்ற அவா எமது பெண்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் பல அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக கிடைக்கப் பெற்ற விழிப்புணர்வு, திறன் விருத்திக்கான வாய்ப்புக்களே ஆகும். இதன் பயனாகவே குறிப்பாகப் பெண்கள் தொடர்பாக "சூரியா" என்ற அமைப்பை நிறுவி கிராமத்திற்கும், கிராமத்துப் பெண்களுக்கும் தொடர்ச்சியான சேவைகளைச் செய்யத்தொடங்கினோம். இதன் விளைவாகப் பொருளாதார வளர்ச் சியிலும், எமது குடும்ப வாழ்க்கையிலும் முன்னின்று வழிநடத்திச் செல்லவும் தலைப்பட்டோம்.

அடுத்து பெண்களின் உரிமைகள் பற்றிய புரிதல்கள் ஆரம்பித்துவிட்டன. எங்கும் பெண்கள் இன்று மிகவும் வலிமை வாய்ந்தவர்களாக மீண்டும் எழுந்துள்ளார்கள். இன்று எமது கிராமத்தில் உள்ள பெண்களுக்குக் கல்வி அறிவு குறைவாகக் காணப்பட்டாலும் அவர்களில் ஒரு ஊக்கமும், தைரியமும் காணப்படுகின்றது. நாம் கல்வி கற்காவிட்டாலும் எதிர்காலத்தில் பெண் பிள்ளைகளை பாடசாலை அனுப்பி கல்வி கற்பிப்பதுடன் பெண்கள் பலதுறைகளிலும் ஆண்களோடு ஒப்பாக வேலை செய்ய வேண்டும், என்ற எண்ணப்பாட்டுடன் பெண்பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பெண்களுக்கு வருமானம் இருக்கும் வரையே அவர்களுக்கு ஒருபலம் இருக்கும். வருமானம் குறைந்தால் குடும்பத்திலேயே மதிப்பு குறைவாக இருப்ப தையும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

பெண்கள் மத்தியிலோ ஆண்கள் மத்தியிலோ பால்நிலை சமத்துவம் பற்றிய பாரிய மாற்றம் ஏற்படாவிட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு ஓரளவு ஏற்பட்டிருக்கின்றது. உதாரணமாக பல சேவைகளை வழங்கும் ஆண் அலுவலகர்கள் பால் நிலை சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிந்ததுபோல் வேலை செய்வதைக் குறிப்பிடலாம். ஆனால், இது தொடர்பாக அவர்களது குடும்பத்தில் அதை ஏற்றுக்கொள்ளாததுடன் அல்லது மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போது அதை ஏற்றுக்கொள்ளாத மனநிலையில் காணப்படுகின்றனர். இவ்வாறான மனப்பாங்குகளும், போக்குகளும் பெண்கள் முன்னேறுவதற்கான சமூகத் தடைகளாக இருக்கின்றன.

படித்து நல்ல தொழிலைப் பெற்று மற்ற வர்களில் தங்கி வாழாது சுதந்திரமாக வாழ்வ தற்கான வழிவகையை ஏற்படுத்துவதே பெண்களாகிய எங்களது இலட்சியமாகக் காணப்படுகின்றது. எமது பெண் பிள்ளைகள் இதன் மூலம் தீர்மானம் எடுக்கும் நிலைக்கு உயர்ந்து வரவேண்டும். அப்போதுதான் அவர்கள் தமது பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்வதுடன் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான வலுவை அடைவர். நாம் இவ்வாறான சிந்தனையுடன் எமது கிராம மட்டத்தில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க எமது பெண்கள் சங்கங்களுடன் இணைந்து வேலைசெய்கிறோம். இது எமக்குப் பெருமை. எம்மைப் பொறுத்தவரையில் நாம் அன்று இருந்ததைவிட இன்று மிக மகிழ்ச்சியாகவும் தைரியமாகவும் சுயமாகச் சிந்திக்கக் கூடியவர்களாகவும் பகுத்தறிவு உள்ளவர்களாகவும் முன்வந்து குரல் கொடுக்கக் கூடிய தைரியசாலிகளாகவும் வாழ்கின்றோம்.

**கோமதி**

*சூரியா பெண்கள் சங்கம், பாணமை.*

# சமகாலத்தில் பெண்களின் முன்னேற்றம்!



ஓவியம்: கமலா வாசுகி

பெண்களின் கல்வி, கலாச்சார பொருளாதார அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நாட்டில் குடும்பங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை சந்தோசத்துடனும், ஆதங்கத்துடனும் பார்ப்பவர்களை இன்று பரவலாகப் பார்க்கின்றோம். அதேவேளை ஒவ்வொரு நாளும் பத்திரிகைச் செய்திகளில் குறைந்தது நாளொன்றுக்கு 5 தொடக்கம் 10 வரையிலான பெண்களும், சிறுமிகளும் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்படுவதையும், இதற்கான எதிர்ப்புக்கள் பல மட்டங்களில் நடைபெறுவதையும் நாளாந்தம் பார்க்கிறோம்.

> **பெண்களின் தேவைகளை அவர்களாகவே பூர்த்தி செய்யக் கூடிய நிலை விழிப்புணர்வு மூலம் உருவாகியுள்ளன. சமூகத்தில் கலாச்சாரக் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டு வாழ்ந்த பெண்கள் தற்பொழுது உரிமைகள் தொடர்பாக அறிந்து அது பற்றிக் கதைக்கிறார்கள். ஆனாலும் அவர்களது உரிமைகள் மீறப்படும்போது மௌனமாகிறார்கள்.**

ஆனாலும் பெண்கள் ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். எவ்வாறாயினும் பெண்களும் மனிதர்களாக வாழவேண்டும். அவர்களது வாழ்வியல் சார்ந்த தீர்மானங்களை அவர்களே எடுப்பதன் மூலம் வாய்ப்புக்களையும், வளங்களையும் பெற்று அவர்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமென்று போராடும் பெண்களும், நிறுவனங்களும், தனிப்பட்ட மனிதர்களும், நாளாந்தம் போராடிக் கொண்டேயிருக்கிறார்கள். அந்தவகையில் பெண்களுடன் வேலைசெய்யும் சில நபர்களுடனும், சமூகத்திலுள்ள வேறு சிலருடனும், இன்றைய நிலையில் பெண்கள் பற்றிய மனநிலை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பற்றி அறிந்துகொண்டு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**துணா (சமூக ஆர்வலர்)**

பெண்களுடன் அதிக காலம் வேலை செய்த அனுபவம் எனக்கு இருக்கிறது. அதன் அடிப்படையில் பார்த்தால் நிறையப் பெண்களிடம் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தங்களது குடும்பத்தினை உயர்த்துவதற்காக வருமானத்தை தேடுவதில், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி கல்வி கற்பிப்பதில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. கல்வி நிலைமைகளைப் பார்க்கும்போது 10 வருடங்களுக்கு முன் க.பொ.த உயர்தரம் படித்தாலே பெருமைப்பட்ட காலம் இருந்தது. ஆனால் தற்போது இதற்கும் மேலான உயர் கல்வியைக் கற்பதற்கான ஆர்வம் பெண்களுக்கும், கற்பிப்பதற்கான ஆர்வம் பெற்றோருக்கும் குடும்பங்களுக்கும் அதிகரித்துள்ளது.

பெண்களின் மன நிலையைப் பார்த்தால் அதிகளவான சவால்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். பதினைந்து, இருபது வருடங்களுக்கு முன் கணவனின் உழைப்பு, பெற்றோர் கொடுத்த சொத்துக்கள் என்பவற்றை வைத்துக் கொண்டு குடும்பத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆனால், தற்போது குடும்பப் பொறுப்பு அதிகரித்துள்ளது. வருமானத்தைத் தேடுதல், பிள்ளைகளைப் பராமரித்தல், கல்வி கற்பித்தல், தாங்களும் கற்றல், சொத்துக்கள் தேடுதல் இவ்வாறான பல பொறுப்புக்கள் பெண்களைச் சார்ந்ததாக இருக்கின்றன. ஓடியோடி உழைக்க வேண்டும் என்ற சிந்தனை, செயற்பாடுகளில் அதிக நேரத்தைச் செலவழிக்கிறார்கள். இவ்வாறான அனைத்து சவால்களுக்கும் மத்தியில் செயல்பட்டதே பெண்களின் மாற்றத்திற்கு காரணமாக அமைகிறது. இதற்கான காரணம் பல நிறுவனங்கள் பெண்கள் சார்ந்து வேலை செய்வதால் அதிகமான பெண்களின் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் அதிகமான குடும்பப் பிரச்சினைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சமூகத்தில் பெண்கள் தொடர்பான ஆண்கள் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டு அவர்களது நடத்தை மாற்றங்களையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**சுபைதா - சமூக செயற்பாட்டாளர் (அக்கரைப்பற்று)**

ஆரம்ப காலகட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பெண்களுக்காக வேலை செய்கின்றவேளையில் கலந்துரையாடல்களுக்குப் பெண்களின் ஒத்துழைப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. காலப்போக்கில் இவற்றில் மாற்றம் காணப்படுகின்றன.

பெண்களின் வருகையை கூடுதலாகக் காணக்கூடிய நிலையேற்பட்டிருக்கிறது. பெண் தலைமைத்துவமுள்ள குடும்பப் பெண்கள் ஏனையோரில் தங்கி வாழ்ந்தனர். தற்பொழுது இவர்களின் வாழ்க்கையில் தமது தனித் திறமையினால் தேவைகளை அவர்களாகவே பூர்த்தி செய்யக் கூடிய நிலை விழிப்புணர்வு மூலம் உருவாகியுள்ளன. சமூகத்தில் கலாச்சாரக் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டு, வாழ்ந்த பெண்கள் தற்பொழுது உரிமைகள் தொடர்பாக அறிந்து அதுபற்றிக் கதைக்கிறார்கள். ஆனாலும் அவர்களது உரிமைகள் மீறும்போது மௌனமாகிறார்கள்.

சிலர் காதிக்கோட்டிற்கு குடும்பப் பிரச்சினைகளைக் கொண்டு செல்கின்றனர். (வீட்டிலுள்ள ஏனைய ஆண்களுடைய உதவியுடன்) மற்றும் 10 வருடங்களுக்கு முன் முஸ்லிம் பெண்கள் வெளிநாடு சென்று உழைக்கும் நிலையிருந்தது. ஆனால் தற்போது இந்நிலை மிக மிகக் குறைந்து காணப்படுகின்றதுடன் கல்வி கற்கும் நிலை அதிகரித்துள்ளது. அரசு, அரசசார்பற்ற, தனியார் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுள்ளார்கள்.

**ம. மாலதி - சமூக செயற்பாட்டாளர்**

பெண்களுக்கு அதிகமாக பொருளாதாரம், வீட்டுச்சுமை என்பன காணப்படுகின்றன. சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டுவருவதில் அல்லது தீர்த்து வைக்க வேண்டும் என்று முன்வரும் நிலையில் பெண்கள் தனிப்பட்ட ரீதியில் தாக்கப்படுகிறார்கள் அல்லது விமர்சிக்கப்படும் நிலையே காணப்படுகிறது.

பெண்கள் சம்பந்தமாகக் கூறும் போது பெண்கள், சிறுமிகள் பாலியல் ரீதியாக வல்லுற

விற்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது உறவுகளுக்குள் அதிகமாக காணப்படுவது பாரிய சமூகப் பிரச்சினையாகும். மேலும் பெண்கள் மத்தியில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக நல்ல விழிப்புணர்வு காணப்படுவது அவர்களில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றமாகக் காணப்படுகின்றது.

**என்.நிசந்தி - சமூக செயற்பாட்டாளர்**

நான் வேலை செய்யும் களங்களை எடுத்துக்கொண்டால் பெண்கள் தங்களது சொந்த வேலைகளுக்காக வெளியிடங்களுக்குச் செல்கிறார்கள். ஆனால் சமூகத்திலுள்ளவர்கள் மத்தியில் இது தொடர்பான தவறான கண்ணோட்டமே காணப்படுகின்றது. மேலும் பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பெண்கள் முன்வருகிறார்கள். நீதிமன்றத்திற்கு மூன்று அல்லது நான்கு தடவைகளுக்கு மேல் சென்றவுடன் பொருளாதாரப் பற்றாக் குறைகள் காரணமாக நீதிமன்றம் செல்வதை விட்டுவிடுகிறார்கள். அவ்வாறு முன்வரும் பெண்கள் அது தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் தொடர்ச்சியாக நீண்டு செல்லும் வேளை பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்குவதாலும், ஒழுங்கான நீதிமன்றத் தீர்ப்பைப் பெறு முன் அதிலிருந்து இடைவிலக நேரிடுவதால் குறிப்பாக வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டு பெண்கள் கணவனுடன் சேர்ந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதனாலேயே மீண்டும் மீண்டும் குடும்ப வன்முறைகளுக்கு பெண்கள் ஆளாகின்றார்கள்.

**இஸ்மாலெப்பை முகமது இர்பான் (அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் - அம்பாறை)**

பெண்களுக்கு இஸ்லாமானது பல உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கியுள்ளது. உதாரணமாகக் கல்வி கற்கும் உரிமை, சொத்தில் பங்குரிமை, நீதி பெறுகின்ற உரிமை, தொழில் செய்கின்ற உரிமை, இவ்வாறு பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. நபி(சல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் அறிவைத் தேடுவதும், கற்பதும் பெண்களினதும், ஆண்களினதும் கட்டாய கடமையாகும். இது பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால்தான் இன்று பெண்கள் கற்றுக்கொண்டு நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்களைப் போல பெண்களும் 1/3 பங்கு சொத்து பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்று அல்குர்ஆனில் குறிப்பிடப்படுகிறது.

**சுகிர்தராணி - சமூக செயற்பாட்டாளர்**

பெண் தலைமைத்துவக் குடும்பங்களை எடுத்துக் கொண்டால் அதிலும் இளம் வயதிலுள்ளவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்குப் படும் கஷ்டங்கள் சொல்லில் அடங்காது. சிலர் முயற்சியெடுப்பார்கள் சிலர் முயற்சியை கைவிட்டு விடுவார்கள். இவ்விரண்டு வகையான பெண்களுக்கும் வாழ்க்கை என்பது சவால்கள்தான். முயற்சியுள்ள பெண்கள் தங்களையும், பிள்ளைகளையும் வளர்த்துக் கொள்வதற்கு பல தொழில்களை பல சவால்களுக்கு மத்தியில் மேற்கொள்கின்றனர். உதாரணத்திற்கு மரக்கறி வியாபாரம் செய்யும் பெண்கள் ஊருக்குள் செல்லும்போது பகிடி பண்ணப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் வீட்டு வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் வீட்டு உரிமையாளர்களின் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்லும் பெண்கள் ஏஜன்சி (இடைத் தரகர்)களினால் ஏமாற்றப்படுகின்றார்கள். (இவர்களில் அனேகமானவர்களைப் பார்த்தால் கணவனில்லாத பெண்களாகத்தான் இருக்கின்றார்கள்.) இவ்வாறு பெண்களின் நிலமைகள் உயிர் வாழ்வதற்கு சவாலாகவே இருக்கிறன. (இப்படிக் கஷ்டப் பட்டு) தமது பிள்ளைகளைப் படிப்பித்தெடுக்க முயற்சிக்கையில் கல்வியை அவர்களுக்கு பூரணமாக வழங்க முடியாதபடி பொருளாதார நிலை உள்ளது. இதனால் பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகி தாய்க்கு உதவி செய்வதற்காக கூலி வேலைகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது.

**ஆ.ஐ.கைதர் (உளவள ஆலோசகர்)**

முன்னைய காலத்தை விட பெண்கள் கல்வித்தரத்தில் முன்னேறியுள்ளதால் அனைத்து துறையிலும் ஈடுபடுவதற்கான நிலைமை உருவாகியுள்ளது. முன்னர் இருந்த சமூகக் கட்டுப்பாடு

கள் உடைக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு முன்னர் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாக மருத்துவத்துறையில் மிகவும் குறைவாகக் காணப்பட்டார்கள். ஆனால் இந்நிலை தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இது முஸ்லிம் பெண்கள் மாறியுள்ளார்கள் என்பதற்கு அத்தாட்சியாகும். முன்னர் இருந்த சமூதாயத்தில் பெண்கள் மாறுவதற்கு தயாரில்லாமல் இருந்தார்கள். இன்று இதை சமூகரீதியில் ஆண்கள் வெளிப்படையாக விமர்சிப்பதைவிட தனிப்பட்ட ரீதியில் பெண்களின் மாற்றத்தை வரவேற்பதில்லை. ஆனால் பொதுவாக பெண்களின் மாற்றத்தை விரும்புவதாக கருத்துக்களை முன்வைக்கிறார்கள். பெண்களின் நலன்பற்றியும், அபிவிருத்தி பற்றியும் எவ்வளவு கதைத்தாலும் பால்நிலையிலான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படும் போது முற்று முழுதாக பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கோ, நீண்ட கால அடிப்படையிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ எதிர்காலத்திற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கோ அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவை அதிகமாகத் தேவைப்படுகின்றது.

**T. சுரேஜினி - சமூக செயற்பாட்டாளர்**

தற்காலத்தில் பெண்கள் சுயதொழில் செய்வதற்கு ஆர்வமாகவுள்ளார்கள். ஆனால் கணவனாலோ அல்லது ஏனைய ஆண்களாலோ வன்முறைகளுக்குள்ளாகும் போது வெளியில் சொல்லப்பயப்பிடுகிறார்கள். வீட்டிலுள்ள ஆண்கள் பெண்களை மட்டுப்படுத்தி, வீட்டுப் பணிகளைச் செய்யவேண்டும் என்ற அழுத்தம் கொடுப்பதால் மனநிலை பாதிக்கப்பட்டு வெளிவராமல் இருக்கிறார்கள். அடுத்ததாகப் பார்த்தால் பெண்களுக்கு சுமை அதிகரித்துள்ளது. குறிப்பாக கிராமங்களில் நடைபெறும் கூட்டங்கள், சிரமதானங்கள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்று பல விடையங்களில் பங்கு கொள்வதால் மன அழுத்தங்கள் கூடியுள்ளன.

வன்முறைகளை எதிர்த்து நிற்கும் பெண்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் இவர்களை ஏற்றுக்கொள்ளும் நிலை குடும்பங்களிலும், சமுதாயங்களிலும் காணப்படுகிறது. இருந்த போதிலும் சாதி, மத ரீதியான பாரம்பரிய சீதனப் பிரச்சனை காரணமாகத் திருமணம் முடிக்காத பெண்களின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதுடன் இளவயதுத் திருமணங்கள் குறைந்தும் காணப்படுகிறன. காரணம் அதிகளவான விழிப்புணர்வுகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக மகள் இளவயதில் திருமணம் முடிக்க முற்பட்டால் தாய்மார் அதனைத் தடை செய்கிறார்கள்.

**சுமந்தி - சமூக செயற்பாட்டாளர்**

பெண்களின் முன்னேற்றங்கள்,தொழில் துறை சார்ந்து ஏற்றுக் கொண்டு கதைக்கின்ற ஆண்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் செயற்பாட்டில் காட்ட முடியாத நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக சந்தர்ப்பங்கள் வரும்போது வாய்ப்புக்கள் வழங்குவதிலோ, பகிர்தளிப்பதிலோ விட்டுக்கொடுப்பதிலோ எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்ளாத தன்மை அதிகமாகக் காணப்படுவ தேயாகும்.

அடுத்து பெண்களுக்கு வருமானம் முக்கிய பலம். வருமானம் குறைந்தால் குடும்பத்திலேயே மதிப்பு குறைவாக இருப்பதையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் மத்தியிலோ, ஆண்கள் மத்தியிலோ பால்நிலைப் பாகுபாடு பற்றிய பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும், ஏற்றுக்கொண்டிருக்கும் மனப்பாங்கு ஏற்பட்டிருக்கிறது. எனினும் சேவைகளை வழங்கும் ஆண்கள் பலர் தேவையின் அடிப்படையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பேசுவார்கள். ஆனால் அவர்களது குடும்பத்தில் அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய அல்லது மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போது ஏற்றுக் கொள்ளாத மனநிலை காணப்படுகிறது. இவ்வாறான மனப்பாங்குகளும், போக்குகளும் பெண்கள் முன்னேறுவதற்கான தடைகளாக இருக்கின்றன.

- வாணி சைமன் -

# இது வர்களின் கதை!



படம் : பூநொச்சமுனை பாயிழைக்கும் பெண்கள்

**காட்சி - 1**

(திரை விலக வீட்டின் அறையினுள் தாயும் இரண்டு பிள்ளைகளும்:

தாய் தேங்காய் துருவிக் கொண்டிருத்தல்)

**மகள் 1:** (வேறொரு அறையின் உள்ளே இருந்து) இந்த வெள்ளச் சட்டையை கழுவிப் போடலயா அம்மா?

**தாய்:** ரின்சோ வாங்கல புள்ள, நாளைக்கு பள்ளி லீவுதானே இண்டைக்கு மட்டும் போட்டுத்து போவன்.....

**மகள் 1:** என்னம்மா... நீ ஒரே இப்படித்தான்....... (மற்றைய மகள் வந்துகொண்டே.......)

**மகள் 2:** இந்தாம்மா தலையக் கட்டிவிடு (தாயின் அருகில் போதல், தாய் தேங்காய் துருவிக்கொண்டே இருத்தல்)

**மகள் 2:** கெதியா வாவன் அம்மா..... நேரம் போகுது....

(தாய் எழும்பி தலையை வாரிக்கொண்டே)

**தாய்:** என்னடி தலைக்கு எண்ண வைக்க சொன்னனான் வைக்கலயா? இழுக்க ஏலாம இருக்கு பாரு ....

**மகள் 2:** அம்மா இண்டைக்கு டெஸ்ட் காசு குடுக்கிறது கடைசி.... தந்துரு சொல்லிட்டன்...

**தாய்:** பாக்கியம் அக்காட்ட மாறிக் கேட்டனான். உங்கட அப்பா இண்டைக்கு ஏதும் கொண்டு வந்தா குடுக்கலாம். போக்குல வாங்கித்து போவன் தருவாவு.

(தலையைப் பின்னிக்கொண்டிருக்கும் போது நபர் ஒருவர் வந்து கூப்பிடும் சத்தம்)

**நபர்:** (பரபரப்புடன்) ராணிஅக்கா ........ ராணி அக்கா .........

**தாய்:** ஓம்..... ஆரது (எட்டிப் பார்த்தல்)

**நபர்:** ராணி அக்கா நான் சுந்தரன் வந்து... வந்து..

**தாய்:** என்ன தம்பி ....... என்ன விசயம் ......

**நபர்:** இப்ப காலையில அவரு சைக்கிளிலயா போனவரு.....

**தாய்:** (பதற்றத்துடன்) ஓம்... ஓம்..... ஏன் கேட்கா ....

நபர்: மெயின்ல இருக்கிற கடையில என்னவோ வாங்கித்து சைக்கிள மிதிக்கக்குள்ள பின்னால வந்த கென்டைனர்காரன் கொண்டு வந்து அடிச் சிட்டான் அதுல அவரு... பாக்கேலாம இருக்கு கெதியாவாங்க ......

(இதைக்கேட்டு உள்ளே இருந்த பிள்ளை ஓடிவரல். இரண்டு பிள்ளைகளையும் அணைத்தபடி கீழே விழல். அவருக்கு முன்னால் **குடும்பப் பொறுப்பு. பொருளாதார நெருக்கடி. குடும்பச்சுமை. சமூகத்தனிமை... கடமை... எதிர்காலம்** போன்ற வாசகங்கள் வைக்கப்படுகின்றன.

**காட்சி - 2**

(மேடையின் நடுவில் தாய் பனையோலைக் கூடை இழைத்துக்கொண்டிருக்கின்றார். மேடையின் நான்கு பக்க மூலையில் பனையோலைப் பொருட்களுடன் நால்வர் படிமமாக)

நபர்1: (கூடையை உயர்த்திக்கொண்டு) வலிகளோடு போராடி என்னைப் பெற்றெடுக்கின்றாள் ......

நபர்2: (கூடையை உயர்த்திக்கொண்டு) பாயில் உறங்கும்வரை பாவப்பிள்ளையாக நான் அவள் கைகளில் .....

நபர்3: (கூடையை உயர்த்திக்கொண்டு) வாழ்வின் சுவடுகள் வண்ணமாகி பெறுமதியான உணர்வுகளுடன் சங்கமிக்கும் போது நான் .....

நபர்: (கூடையை உயர்த்திக்கொண்டு) பொருளாதார செலவுகளை துரத்திப் பிடிக்க நான் அவளுக்காய் ...... (என்று கூறிச் செல்கின்றனர்)

..............................................................

.

**பெண்**: தேவி அக்கா.... தேவி அக்கா .....


**தேவி**: ஆரது! நீயா புள்ள வாவன் இரு .......

**பெண்**: என்ன கூட இழைக்கிறீங்க போல (அருகில் இருத்தல்)

**தேவி**: ஓம் மனே.... நாளைக்கு யாவாரி வாறெண்டவன். அதுதான் கைபுடி போடுறன். என்ன புள்ள என்னவும் பதிஞ்சி திரியிறயா?

**பெண்**: இல்ல தேவி அக்கா.... நம்மட ஊருல நிறையபேர் கூட இழைக்கிறதானே. இவங்கள பற்றி ஆய்வு ஒன்று செய்யனும். அதுதான் உங்களோடயும் கதைக்கலாம் என்று வந்தனான்......

**தேவி**: இப்படியெல்லாம் செய்யனும் என புள்ள! அதுவும் படிப்புதான் போல?



**பெண்**: ஓம்.. சரி நாம "கூட" இழைக்கிறத பற்றி கொஞ்சம் கதைப்பமே!

**தேவி**: நேற்றுத்தான் மூணு கூட குடுத்தனான். இன்னா இதுக்கு கைப்புடி போடுறன். ரெண்டு அடியும் கிடக்கு. அம்மா தேத்தனீ இருக்கா?

**பெண்**: பரவால வேணாம் அக்கா. நீங்க எப்ப இருந்து கூட இழைக்கிறீங்க......

**தேவி**: இவள் விஜிக்கு பத்து வயசு பழகி இழைக்கக்குள்ள புள்ள இப்ப இருபத்திரெண்டு வயசு. பன்னெண்டு வருசம்

**பெண்**: எங்க தேவி அக்கா பழகுனனீங்க?

**தேவி**: அது புள்ள தொன்னூறாமாண்டு பிரச்சனைக்கு பிறகு காரைதீவு இருந்து வந்த ரீச்சர் வந்து பழக்கினவ. நாற்பது பொம்பளயல வச்சி தான் பழக்கினவ. எங்கட இடத்தில நான் மட்டுந்தான். நான்தான் இதுகளுக்கு பழக்கினன்.

**பெண்**: கூட மட்டுந்தானா பழக்கின தேவி அக்கா ....?

**தேவி**: ரீச்சர் கனக்க சொல்லி தந்தவ புள்ள. மீன் கூட.... பெரியகூட.... தொப்பி..... இடியப்ப

தட்டு...... கேக் ஊத்தி வைக்கிற எண்டு அறுபது டிசைனுக்கு மேல சொல்லி தந்தவ எல்லாம் எனக்குத் தெரியும்.

**பெண்:** இப்ப அதையெல்லாம் இழைச்சி விக்கி றீங்களா?

**தேவி:** பெரிய கூடையும், ஈர்க்கில் கூடையும், சின்ன கூடையும்தான் இழைக்கிற. கடக்காரன் அதுமட்டுந்தானே கேக்கான்.

**பெண்:** குணம் அக்கா சொன்னவ மழை வந்தா இழைக்கேலாதாம் என?

**தேவி:** மழை எண்டா கஸ்டம்தான். மழைக்கி ஓல மஞ்சலடிச்சிடும். ஆனா அதுக்கு சாயம் போட்டு செய்யலாம்..

**பெண்:** ஒரு கூட ஒரு நாளைக்குள்ள இழைப்பீங் களா?

**தேவி:** வீட்டுவேல எல்லாத்தையும் முடிச்சித்து இருந்தா எப்படியும் ஒரு கூட இழைக்கலாம். எங்க புள்ள இடுப்பு கடுக்கிற..... எந்த நேரமும் கூடையை பாத்து பாத்து இழைக்கிறதால கண்ணும் குத்துற...... கொஞ்சநாளா இந்தக் காலும் கடுக்கிற இருந்து இழைக்கிறதானே......

**பெண்:** ம்.. அப்படியா?

**தேவி:** என்ன செய்யிற கூட இழைக்கிறதால தான் செலவு காட்ற இல்ல.... சீட்டுக் கட்டுற..... லோன் கட்டுற..... இனி சாப்பாட்டு செலவு எண்டு சமாளிக்கிறதுக்கு காணும் .....

**பெண்:** தேவி அக்கா கூடைய இழைச்சா வியாபா ரிக்கு மட்டுந்தானா குடுக்கலாம்?

**தேவி:** இல்ல புள்ள சென்ரருக்கும் குடுக்கலாம். வதனி, கமலக்கா எல்லாம் சென்ரருக்கு குடுக் காங்க

**பெண்:** சென்ரருக்கா.....!

**தேவி:** இஞ்ச சவுக்கடில ஒரு சென்ரர் இருக்கு. இழைக்க பழக்கிறதும்தான். ஆக்கள வைச்சி இழச்சி விற்கிறதும்தான்........ யாவரிய விட இருபது. முப்பது கூட்டி தருவாங்க...... மார்கழிக் குள்ளயும் குடுக்கலாம். ஆனா யாவரிய மழை நேரம் நம்பேலா.....

**பெண்:** அப்படியா! அப்போ நீங்க ஏன் சென்ர ருக்கு குடுக்கிறதில்ல?

**தேவி:** எங்க புள்ள, சென்ரருக்கு குடுக்கிற எண்டா வடிவா...... சின்ன ஓலயால இழைக்கனும். குடுத்தா காசும் பதினஞ்சி நாளைக்கு ஒருக்காத்தான் தருவாங்க. இல்லாட்டி மாதக் கடசிலதான்...... நம்மட அண்டண்டக்கி செலவுக்கு சரிவராது. அதோட புள்ள கணக்க தூரம் நடந்துகொண்டு குடுக்கனும். யாவரி எண்டா காலடிக்கு வருவான்.

**பெண்:** அப்படியா! வாற வியாபாரிக்கு கொடுக்கி றத விட சென்ரருக்கு குடுக்கிறது நல்லந்தானே...... காசும் கொஞ்சம் கூட கிடைக்கும்.

**தேவி:** பாப்பம் புள்ள .......

**பெண்:** எப்படியோ வருமானம் கிடைக்குது என தேவி அக்கா.......

**தேவி:** ஓம் புள்ள.... பாத்தாயா நீ வந்து கதச்சி இருந்ததுல இழைச்சதே தெரியல.... அடுத்த அடியும் போட்டுத்தன். இல்லாட்டி இரவைக்குதான் போட்டிருப்பன் ......

**பெண்:** சரி நான் நாளைக்கும் வாறனே. (பெண் செல்லுதல். தேவி இழைத்துக் கொண்டிருத்தல்)

**பாடல்**

> தோல்வி கிடைக்கும் வாழ்வில் நாளும்
> எதிர் கொள்ள வேண்டும்
> விடிவைத் தேடும் பெண்கள் - நாங்கள்
> சிறகு விரிந்த .............
> (ஓ... ஓ....)
> சமூகத்திலே எங்கள் குடும்பத்திலே -
> ஆழம் தேடும் பட்சி நாங்கள்

(மேடையில் இன்னொருவர் இழைத்துக் கொண்டிருக்கின்றார். (வாகன சத்தம்)

**தாய்:** அந்த கூட எல்லாத்தையும் குடுபுள்ள..... வாவுட புள்ளயல் தந்த அதையும் குடு. இதுக்கும் கைபிடி போட்டிருந்தா குடுத்திருக்கலாம். நாளைக்கு லோண் கட்டனும்........ காசும் கேட்டுப்பாரு.....

**மகள்:** (தாயின் அருகே) இந்தக் கூட நொலு நொலு எண்டு இருக்காம்.... வேணாதாம்.....

**தாய்:** அந்த புள்ளயலுகள் தந்ததானே. புதுப் பழக்கம்தானே. எடுத்துத்து குறைய எண்டாலும் காச தந்திருக்கலாமே அவன்..... நம்மட கூடைக்கு என்ன சொன்னவன்.....

**மகள்:** அண்டைக்கு வாங்குன காசுக்கு இன்னும் மூணு கூடை குடுக்கனுமாம். காசு தரல்ல அம்மா..... புதன்கிழம வாறானாம்...... இழச்சி வைக்கட்டாம்

**தாய்:** நாசமா போனவன்..... கடைக்கு போகனும் எண்டு இருந்தனான்..... காய்ச்சல்கார புள்ளைக்கு சோடா வாங்கி குடுக்கையும் காசு இல்ல...... நாளைக்கு முகம் கழுவ முதல் லோண்காரன் வந்து நிற்பானே.

**மகள்:** அப்பவும் நம்மட கூடையும் இழைப்பு சரியில்ல எண்டு நூறு ரூபா தாறானாம் எண்ட வரு......

**தாய்:** நூற்றிருபது ரூபாய்க்கு என்னயாம். குறைய விலைக்கு எடுத்துக் கண்டுத்தாரு. சென்ரருக்கு குடுக்கிற எண்டா அங்க உடனேயும் காசு தரமாட்டங்களே. என்னயிற இவனுகளுக்குத் தானே குடுக்கனும்.

(இவர்களுடன் சேர்த்து இன்னும் சிலர் மேடையில் இருந்து பின்னிக் கொண்டிருக்கிறார்கள்)

பாடல்

வலிகள் என்றாலும் - வீண்
வார்த்தை என்றாலும்
கூடைகளையே இழைக்கவேணும்-
ஒருநாள் பொழுதுபோகவேணும்

(பாடல் முடிவில் மேடையின் நான்கு திசைகளிலும் இருந்து கூடை பின்னுபவர்களைப் பார்த்து)

**வாசகம் 1:** நமது உழைப்பை நாம் மட்டுமே பெறவேண்டும்

**வாசகம் 2:** தரமானதை இழைத்து ஏன் சென்ருக்கு கொடுக்க முடியாது?

**வாசகம் 3:** பலவிதமாக பின்னப் பழகுவோம். பல பொருட்களை செய்வோம்

**வாசகம் 4:** நாமே கடை ஒன்றை தொடங்கு வோம்

**வாசகம் 5:** அதை நாமே செய்வோம். நம் இடத்திலேயே செய்வோம்

**அனைவரும் :** எங்களுக்கே எங்கள் உழைப்பு

■ R.ரேவதி




அழகான வாழ்வின்
அத்திவாரம் நீயென
அன்றொரு நாள்
அடிமனம் நினைத்தது

அற்புத வாழ்வினை
அர்த்தமற்ற வாழ்வாக
இடைநடுவே
வழிமாற்றி சென்றுவிட்டாயே

அவதியுறுவது
கட்டிய மனைவி மட்டுமா?
அவள் பெற்றெடுத்த – உன்
குழந்தையும் தானே!

தடம் மாறிப் போன
வாழ்விற்கு
வழிசொல்ல யாருமின்றி
தவிக்கிறாளே தனிமரமாக

அவள் மட்டும் - பிஞ்சுமகனின்
கேள்விக் குறியான எதிர்காலத்தையே!
எண்ணிமனம் வருந்துகின்றாளே!
மடியில் அவள் குழந்தையுடனே!

■ திருமதி. ஜெனிதா




அடக்கமான உடையில்
ஆணாதிக்கத் திமிரோடு
இம்சை புரிபவன்
வெற்றியும் பெறுபவன்தான்
அவன்.



# இன்றைய தமிழ் சினிமாவும் பெண்களின் நிலையும்

கலை என்பதற்கு ஒரு நோக்கமுண்டு. அந்த நோக்கத்தை சமூகப் பணி என்று கூறலாம். சினிமாவும் இத்தகைய ஒரு கலைதான். ஆனால், அதற்கான இலக்கினை நோக்கி அது பயணிப்பதில்தான் சிக்கல் நிலை தோன்றுகிறது. சினிமா என்பதைச் சுருங்கத் தெளிவாக அடையாளப்படுத்தின், "சினிமா என்பது பிரதானமாக அசையும் பிம்பங்களின் வழிவரும் கட்புலக் கவர்ச்சி" எனலாம். நவீன தொடர்பு சாதனங்களில் சினிமாத் திரைப்படங்கள் சக்தி வாய்ந்த சாதனமாக மாறியுள்ளன. சினிமா மூலமாக சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்கின்ற அளவிற்கு மக்களுடைய வாழ்க்கையில் சினிமா பின்னிப் பிணைந்துள்ளது. அவ்வகையில் உலக

திரைப்படக் கலை வரலாற்றில் தமிழ் திரைப் படங்களுக்கு சிறப்பான இடமுண்டு. சினிமா என்கின்ற இப் பெரிய ஊடகமானது மக்களுக்கு பயன்படுமளவிற்கு கருத்துக்களை வழங்குவதற்காக பயன்படுகின்றதா? என்பது விவாதத்திற்குரிய ஓர் விடயமாகும். சிறந்த சமூகத்திற்கு சென்று

சேரக்கூடிய ஒழுக்கங்களை, கலாச்சாரங்களை, பாரம்பரியம் பிரதான விடயங்களை இன்றைய சினிமா கற்று தருகின்றதா? என்றால் அதற்கான பதில் இல்லை என்பதுதான்.

இன்று விவாதத்திற்குரிய முக்கிய விடயம் யாதெனில் இன்றைய சினிமா திரைப்படங்கள் பெண்களை எவ்வாறு சித்தரிக்கின்றன என்பது தான். பெண்களை வைத்துப் போற்றி, காவியம் படைத்து, போராட்டம் நடாத்தி மேடைப் பேச்சுக்களால் அதிரவைத்து முன்னேறியவர்கள் பலர். ஆனால், பெண்கள் அன்றும், இன்றும் பல்வேறு சக்திகளால் நசுக்கப்பட்டு பின்தள்ளப் படுகின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது என்பதையும் மறுக்க முடியாது. அரசியல், விஞ்ஞானம், மருத்துவம் என்று விரல்விட்டு எண்ணக் கூடிய துறைகளில் பெண்கள் ஒருசிலர் நுண்ணறிவு, ஆளுமை விருத்தியால் முன்னேறினாலும் அதிகளவில் பெண்களை சமுதாயம் கம்பிகளுக்கு பின்னால் கொத்தடிமைகளாக வைத்துப் பார்க்கவே விரும்புகின்றது. இன்றைய சினிமாவும் பெண்களைப் பற்றி இழிவான இத்தகைய எண்ணப் பதிவுகளைத்தான் பதிய வைக்கின்றது. எப்படித்தான் முற்போக்கான கருத்துக்களை அள்ளி வீசினாலும் துருப்பிடித்த கருத்துக்கள் சமூகத்தை விட்டு இன்னும் அகலவே இல்லை.

பெண்கள் திரைப் படங்களில் மதிக்கப்படும் கதாபாத்திரங்களை ஏற்று நடித்தும் வருகின்றனர். குறிப்பாக நந்தனார் எனும் திரைப் படத்தில் கே.பி சுந்தராம்பாள் இரண்டு வேடங்களை ஏற்று நடித்துள்ளார். ஔவையார் திரைப் படத்தில் இவர் நடித்த காட்சிகளில் ஔவையாகவே எம் மனக்கண் முன்னே தோன்றினார். நடிப்பு திறமை மட்டுமின்றி குரல் வளத்தாலும் பல இன்னிசை பாடல்களால் சினிமா கலையுலகையே ஒளிரச் செய்த ஓர் அற்புத நடிகையாக விளங்கினார். தில்லானா மோகனாம்பாள் பத்மினியின் நடன திறமையை உலகிற்கு காட்டியது. பூம்புகார் திரைப்படத்தில் கண்ணகியாக உருவெடுத்து நின்ற விஜயகுமாரியின் நடிப்பு திறமை அதிகம் பேசப்பட்டது. மகாதேவி, பாசமலர் போன்ற படங்களில் சாவித்திரி முக்கிய கதாப்பாத்திரமாகவும் திரைக்கதைக்கு உயிரோட்டமாகவும் நடித்து பெருமை பெற்றிருந்தார். சரஸ்வதி சபதம் எனும் திரைப் படத்தில் பத்மினி, சாவித்திரி, தேவிகா போன்ற நடிகைகளின் நடிப்பு அமோகமாக வரவேற்கப் பட்டது. அன்றைய காலக்கட்டத்தில் சிறந்த நடிகைகளுக்காக திரைக்கதை எழுதப்பட்டது. ஆனால் இன்று திரைக்கதைக்கு அழகு சேர்ப்பதற் காகவே நடிகைகள் தேவைப்படுகின்றனர்.





கணவன் மனைவி குடும்ப வாழ்க்கையில் கணவனே எல்லாம் அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பெண் அவனுக்கு பணிவாள். கணவன் எப்படி வாழ்ந்தாலும் மனைவி கணவனுக்கு தொண்டு செய்து வாழவேண்டும். மேலும் பெண்ணானவளுக்கு கட்டுப்பாடுகள் ஏராளம் என்றாலும் கணவன் மனைவி உறவின் பேதத்தை தமிழ்த் திரைப்பட வரலாற்றில் நெடுகிலும் பேசியே வருகிறது. கல்லாதவனானாலும் கணவன், கிறுக்கனானாலும் கணவன், ஊனமுற்ற குரூபியானாலும் கணவன், கிழவனானாலும், கயவனானாலும் கணவன், பலரை மணந்தாலும், வதைத்தாலும் கணவன் என்றும் மனைவியானவள் குடும்பத்தை சுமப்பவள், உயிரைக் காப்பவள், பெயரைக் காப்பவள், தியாகம் செய்பவள் என்ற பால்நிலை வேறுபாட்டினூடாக பெண்ணடிமைத்தனமானது ஆரம்ப காலத்திலிருந்து திரைப்படவரலாற்றில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

கலாவதி, நல்லதங்கை, படித்தபெண், ரம்பையின் காதல், மகாகவி காளிதாஸ் போன்ற ஆரம்பகால திரைப்படங்களை இதற்கு உதாரணங் காட்டலாம். இன்றைய தமிழ் திரைப் படங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. பெண்ணடிமை மற்றும் ஆண் ஆதிக்கத் தொனியானது இன்றைய திரைப்படங்களிலும் இலகுவாக அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது. சமுதாயத்திலுள்ள மரபுகள் கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தா

லும் மனைவி கணவனை தெய்வமாகக் கருதி சேவை செய்து வாழ வலியுறுத்துகிறது. ஆனால் ஆணுக்கு அவ்வாறு எதையும் சமூகம் ஏன் வலியுறுத்தவில்லை. திரைபடங்கள் ஏன் இதை கதைக்க வில்லையென்பது கேள்விக்குறியே?. இன்றைய சினிமா திரைப்படங்கள் பெண்களை பிழையான நடத்தையுடையவர்களாக வடிவ மைக்கின்றன. பெண்களை கேலி செய்யும் திரைப் படங்களே தற்போது வெளியாகின்றன. இளைஞர் கள் மனதை கவர்வதற்காகவும், நகைச்சுவை உணர்வை அதிகரிப்பதற்காகவும் பெண்களை விதவிதமான கதாபாத்திரங்களில் வடிவமைக் கின்றன. மற்றும் திருநங்கைகளை கேவலமாகப் பார்க்கும் ஒரு பார்வையினை சினிமா பதியவைக் கின்றது.

உடல் கவர்ச்சியைக் காட்டி பார்வை யாளரை மயக்கும் போதைப் பொருளாகவே பெண்களை இன்றைய சினிமா உலகம் எண்ணு கின்றது என்பது கவலைக் குரிய விடயமாகும். திரைப் படங்களில் நடிகைகளுக்கு எவ்விதமான முக்கியத்து வமும் வழங்கப்படுவதில்லை. வெறுமனே நகைச்சுவை தொனியிலேயே திரைப் படங்கள் வெளியாகின்றன. மனோரமா, கோவை சரளா போன்ற நடிகைகள் நகைச்சுவை நடிப்பின் வாயிலாக தனியிடத்தைப் பெற்றவர்கள். ஆனால் இன்றைய கால கட்டத்தில் நகைச்சுவை நடிகர்கள் விவேக், சந்தானம் போன்ற நடிகர்கள் பெண்களை ஏளனமாக கிண்டலடிப்பது, முதியோர்களை நகைச்சுவை பாத்திரமாக பாவிப்பது மேலும் திரைப்பட பாடல்களில் பெண்களை கீழ்த்தரமாக பாடுவது போன்ற கைங்கரியங்களை மேற்கொள்கின்றனர்



திரைப்படங்களில் பெண்களை அவமானப் படுத்தும் வகையில் பாடல்கள் பாடப்படுகின்றன. குத்துப் பாடல்களுக்கு பெண்களை கவர்ச்சியாக நடனமாட வைப்பது, உல்லாச விடுதிகளில், இரவு நேர களியாட்டங்களில் அரைகுறை ஆடையோடு ஆடுவது போலக் காட்டுவதே நவீன தமிழ்ச் சினிமாவின் புதிய கண்டுபிடிப்புக்கள். இன்றைய சினிமா திரைப்படங்கள் "காதல்"எனும் பெயரில் காட்சிப்படுத்துபவற்றை உற்றுக் கவனித்தால் ஒரு பெண்ணை தன் துணைவியாக மாற்றிக்கொள்ள முதலில் அவரை அவமானப்படுத்தி, தொட்டு, இழிவுப்படுத்தி, தொடர்ந்து மன உழைச்சலுக்கு தள்ளி பெண்களுடைய தன்மானம், தன்மதிப்பு இவற்றை கீழிறக்கும் சாகசத்தை மேற்கொள்கி றது. தொடக்ககால திரைப்படங்களில் பெண்ணை ஆபத்திலிருந்து காப்பது ஆண் என்ற காவிய நாடக மரபை ஒட்டிய காவியங்கள் வந்தன. அதற்கு பின் அப்பெண்ணின் உடல், உயிர் இரண்டின் மீதும் உரிமைகொள்வதை நியாயப் படுத்தவும் வேறு ஒரு துணையை தேர்ந்து கொள்ளும் உரிமையை அந்தப் பெண் இழந்து போவதை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு கதை உத்தி இருந்தது அது கறுப்பு வெள்ளை காவிய முறை.

ஆனால் இன்றைய வடிவமோ சட்டத்தால் தடைசெய்யப்பட்ட பெண் கள் மீதான வன்முறை செயலைச் செய்து காட்டு வது என்பதாக மாறியி ருக்கிறது. பெண்களை ஒரு போதைப் பொருளாக சித்த ரிப்பதுடன் வன்கொடுமை காதலின் தொடக்கமாக இருப்பதை சினிமா நியாயப் படுத்துகிறது. "ஏங்கடி இப்படிப் பிடிவாதம் பண் றிங்க; என்னக்கி இருந்தாலும் ஒரு ஆணுக்கு கழுத்த நீட்ட வேண்டியவங்கதானே" என்று சொல்லுமளவிற்கு இன்றைய சினிமாவில் பெண்களின் அவல நிலையுள்ளது. ஒரு பெண் ணின் அறைக்குள் நுழைந்து அவள் உடை மாற்றுவதை பார்த்துவிடுவது என்பது தண்ட னைக்குரிய குற்றம் என்பதைக் கூட தமிழ் இளைஞர்களுக்கு சொல்லித்தர அறிவற்ற இத் திரைமொழி தன்னைத் தமிழர்களின் அடையா ளமாக முன்னிறுத்துவதுதான் கேலிக்குரிய விடயமாகும்.

தமிழ் இளைஞர்கள் பெண்களை பார்வை யால் தொல்லைப்படுத்துவதைப் போன்றும் அதனை எதிர்த்துக் கேள்வி எழுப்பும்போது "நீங்கள் ஆண்களைப் பார்த்து இரசிக்கும்போது

குற்றமில்லை. நாங்கள் அதை செய்தால் குற்றமா?" என்பது போன்ற கேள்வியைக் கேட்டு தம் அறிவையும், வீரத்தையும் நிலைநாட்டுவது போல் இன்றைய திரைப்படங்களில் வசனங்கள் அமைகின்றன. இத்தோடு ஒரு பெண் கவனக் குறைவாக ஒருவர் மீது இடித்துவிட்டு மன்னிப்பு கேட்கும் போது "இதுவே ஆண்கள் இடித்து விட்டால் எவ்வளவு பிரச்சினை செய்வீர்கள்" என்பது போன்ற வசனங்களுடைய காட்சிகளுக்கு திரையரங்குகளில் கரகோஷம் வானவை எட்டுகின்றது. இவற்றை எண்ணும்போது எம் சமூகம் எங்கு சென்று கொண்டிருக்கின்றது என வருத்தம் மேலிடுகிறது.

இவ்வகையில் தமிழ் திரைப்படங்களில் திரைக்கலை, திரைமொழி குறித்து பழகி தோய்ந்த இத்தகைய உண்மையை மறைக்கும் மாதிரி படிமங்களே உருவாகியுள்ளன. இதிலிருந்து மாற்றுக் காட்சி முறையோ, கதை முறையோ, திரைமொழிக் கதை வடிவமோ உருவாக முடியாத ஒரு சூழலே இன்றைய சினி உலகில் நீடித்து வருகிறது. இந்நிலை மாற்றம் பெறுவது முக்கியமாகும். பெண்மை மீதான வன்முறை, தீண்டாமையை நியாயப்படுத்தும் சாதிவெறி, பகுத்தறிவு மறுப்பு, அர்த்தமற்ற நகைச்சுவை இவைதான் இன்றைய சினிமா திரைப்படங்கள் சாதித்துக் கொண்டிருக்கின்றன என வருத்தத்துடன் ஏற்கவேண்டியதாயுள்ளது. ஆக்கபூர்வமான சமூகமாக தமிழ்ச் சமூகத்தை மாற்ற சினிமா வகை செய்யாமல் வன்முறை உணர்வு மிஞ்சும் சமூகத்திற்கான வழியைதான் காட்டுகிறது எனலாம்.

**இரா. மல்லிகாதேவி**

## ஊடகம்

காலம் காலமாக
காதலைக் கருவாக்கி
கண்ட வழிகளில்
காட்சிகளைக் காட்டி
கதையின்
உள்ளடக்கத்தினை மாற்றாது
உருவத்தினை மாற்றும்
உருப்படாத ஊடகம்
.........................
கடத்தல்காரனுக்கு
கள்ள உத்தி
கள்ளனுக்கு
குள்ளப் புத்தி
கொலைகாரனுக்கு
நழுவும் சக்தி
நயவஞ்சகனுக்கு
நரிப்புத்தி
ஆயுதக்காரனுக்கு
கையாளும் உத்தி
இளைஞர்களுக்கு
இழவுகளையும்
இழிவுகளையும்
இலகுவாயும்
இலவசமாயும்
புகட்டும் ஊடகம்.



கடவுளுக்குச் சிலை
கண்மட்டத்தில்.
பக்தர்களோ
அங்கொன்றும்
இங்கொன்றும்.
-ஆனால்.
சினிமாநாயகனுக்கு
வானத்தைத் தொட
கட்டவுட்.

**சினிமா**

கடத்தல்
கவர்ச்சி
காதல்
காமெடி
கலாட்டா
கொலை
கொள்ளை
ஆடல்
பாடல்
கலந்தகலவை



**இவை**
**எமக்கல்ல...**

பகலில் பதுமை
இரவில் பரத்தை
குழந்தை ஆக்கும்
இயந்திரம்
கணவனின்
காலடியில்
கட்டப்பட்டிருக்கும்
அடிமை
கண்டவனுக்கு
காமத்தின் விருந்து

□ கவிதைகள் - க. சுமதா -

**முகமூடி**



தெளிவாகத் தெரிகிறது
ஏட்டுச் சுரக்காய் என்று - இருந்தும்
விழுந்து எழுந்தும் தேடுகிறோம்
பணப் பையை பதம் பார்க்கும் தியேட்டரை
பணம் சேர்க்கும் ஒரு கூட்டம்
புகழுடன் தொழில் தேடும் ஒரு கோஷ்டி
நடுவில் பலியாகும் நம் ஜாதி!

• ..........................

யதார்த்தமான பிரச்சினைகள் - என்றும்
கதையாக ஆவதில்லை - அமைந்தாலும்
ஓர் ஆயிரம் திரிபுகள்
ஒருங்கே கதையில் நிற்கும் - மறுபுறம்
யதார்த்தம் என்ற போர்வையில்
அரிவாள்கள் முட்டி மின்ன
இரத்தம் கரை புரண்டு உறைய
வன்முறைக்கு எண்ணைய் ஊற்றி
வாழ வைக்கும் தமிழ் சினிமா!

• ..........................

மேல்நாட்டு அறிவியல் துரிதம் கண்டும்
ஆர்வத்தை தாழவிட்ட தமிழன்
அஜித் விஜயின் பிறந்த நாளில்
ஆர்ப்பரித்து எழுவதுவும்
பெரும் போஸ்டர் அடிப்பதுவும்
பாலாபிஷேகம் வேறு பொழிவதுவும்
கரை காணாத கதைகளாய்.........
இவைகள் சினிமாவின் பிழையா?
எம்மவரின் குறையா?
பதிலிருந்தும் மௌனியாய்!

சொல்லொணா கண்கட்டி வித்தை
கடலை மலையாக்குவர்
தம்மை மண்ணாக்குவர்
இத்தனைக்கும் அவன் யார்?
நடிகன்.... வெறும் நடிகன் தான்!

**த. யுகவதனி**
கிழக்குப் பல்கலைக்கழகம்

> அடுத்தநாள் பேப்பரிலே முப்பது வருஷமாய் பிரிஞ்சிருந்த தம்பதியினர் ஐம்பது வயசில இணைகின்றனர் என்று செய்தி எதுகை மோனையோடை வந்தது.




"இவள் இப்படித் தான்! என்னத்தான் எல்லா வேலையையும் செய்யச் சொல்லுறாள். இந்த ஏலாத காலோட பாவமெண்டு கொஞ்சம் உதவி செய்தா ஆகலும்தான்"

என்று நச்சரித்த படியே வெயிலிலே காயப் போட்டிருந்த மாங்காய் வத்தலை சற்று கிளறி விடுகிறாள். அடுப்படியிலே இருந்து கடமுட கடமுட என்று சத்தம் கேட்குது. "அக்கா பெருஞ்சீரகம் வைச்ச போத்தலை எடுத்தனியா?"

என்ற குரலும் குசினியில இருந்து சேர்ந்து வருகிறது. வெளியிலே சுழகிலே இருந்த மாங்காய் வத்தலை கைகளால் சேர்த்தபடியே,

"நான் பார்க்க இல்லை, நீதான் எங்கேயாவது வைச்சிருப்பா, அலுமாரியிலே பாரு" என்கிறாள் பவளம்.

அவளின்ர பேச்சு தோரணையிலேயே ஓர் அதிகாரம் தெரிகிறது. ஆம், உண்மையிலேயே அவள் அதிகாரத்திலே இருந்தவள்தான். இப்ப பென்ஷன். ப்பிறின்சிப்பலாய் இருந்து றிட்டயட் ஆகினவள். அந்த அதிகாரம்தான் இப்பவும் அவளின்ர தொனியிலே தெரிகிறது. நாற்பதினாயிரம் வரை பென்ஷன். அவளின்ர மட்டுமில்லை அவளின்ர புருஷனுடையதும் தான். அவன் செத்துப்போய் நாலு வருஷமாகிது. அவனின்ட செத்த வீட்டுக்குக் கூட போகயில்லை. பிறகு எப்படி...!!! அது ஒரு பெரியகதை.

பென்ஷன் முழுவதையும் ஒட்டு மொத்தமா தன்ர தங்கச்சியின்ர குடும்பத்துக்கே குடுத்திடுவாள். பிறகு தங்கச்சியின்ர குடும்பத்தோட தான் அவளின்ர வாழ்க்கை. அவளின்ர தங்கச்சிதான் குசினியிலே பெருஞ்சீரகப் போத்தலை தேடுகிறாள். தங்கச்சியின்ர புருஷனுக்கோ தொண்ணூற்றைஞ்சாம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பிறகு வேலையில்லை.

அதுவரைக்கும் கூப்பன் கடை. மூன்று தலைமுறை யாக பிரபலமாகத்தான் இருந்தது. பாழாப்போன நாட்டுப் பிரச்சினை வீட்டையும் குழப்பிப் போட்டுது. இரண்டு பிள்ளைகள் அந்த குடும்பத்திலே. அதனுடன் பவளமும் இணைந்து கொள்கிறாள். ம்ம்......... இல்லை இல்லை. தன்னை இணைத்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தமாக கூட இருக்கலாம் ....

"எடுத்திட்டியாடி பெருஞ்சீரகப் போத்தலை"? என்றபடி சுழகை வைச்சிட்டு நிமிர்ந்து பார்க்கும்போது ஒரு சைக்கிள் வந்து நிற்குது. அவன்தான் தங்கச்சியின்ர மூத்த பொடியன். அவனை படிப்பிச்சு ஒரு நிலைக்கு கொண்டுவந்திட்டா என்ர கடமையில பாதி முடிஞ்ச மாதிரி என்ற நினைப்பு அவளுக்கு. அப்படித்தான் போலும்...... அந்த பொடியனை சின்ன வயசில இருந்து தூக்கி வளர்த்தவளே இவள்தான். எனக்கொரு பிள்ளை இருந்திருந்தால்? இல்லை..... இவன்தான் என்ர பிள்ளை என்றே முடிவு செய்திட்டாள் போல.....

"டேய் சாப்பிட்டுப் போ"

என்றபடியே வீட்டுக்குள் போகிறாள். யாரின்ட வீடு? அதுவும் தங்கச்சியிடதான். ஒரே வளவுக்குள்ளேயே இரண்டு வீடு. பின்னாலே தங்கச்சியின்ர வீடு. அவளின்ர ஐயாஅம்மா பின் வளவிலே இரண்டாவது பொம்பிளைப் பிள்ளைக்கு ஒரு வீட்டையும், தாங்கள் சிறப்பாய் வாழ்ந்து இருந்த வீட்டை சீதனமாய் மூத்த பொம்பிளைப் பிள்ளைக்கு கொடுக்க வேண்டுமென்ற ஆசையாலயும் தங்களைப் போல பிள்ளைகளும் சிறப்பாய் வாழுங்கள் என்ற நம்பிக்கையாலயும் அதுகளுக்கே எழுதிவைச்சிட்டு காலமாகிட்டாங்கள். மூன்று ஆம்பிளைப் பிள்ளைகள். அதுகள் தங்களை தாங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்ற நம்பிக்கை ஐயா அம்மாக்குபோல. அதுதான் அதுகளுக்கு பெரிசா ஒன்றும் கொடுக்க இல்ல.....

மூத்த பிள்ளைதான் பவளம். ஐயா அம்மா சிறப்பாய் இருந்த வீட்டிலதான் இவளும் வாழ ஆரம்பித்தவள். அவளும் சிறப்பாய்த்தான் இருந்தாள். அவன்தான் பவளத்தோட சிறப்பாய் வாழ கொடுத்து வைக்க இல்லை .... என்ன இருந்தாலும் பவளத்தின்ர வாழ்க்கைதானே நிலைகுலைஞ்சு போச்சு. ஆனால் பவளம் தடுமாற இல்லை. மனசார அவனோட வாழ்ந்தாள். அவன் இவளை வேண்டாம் என்று சொல்லி அவன்ர வாழ்க்கையைத்தான் பாழாக்கிப் போட்டான். இவளைப்போல ஒரு பொண்டாட்டி கிடைச்சும் அவனுக்கு வாழத் தெரியேல்லை. இங்கிலீஸ் மாஸ்டர் அவன். அதுதான் போல..... பவளத்தை இவனுக்கு கட்டிக்கொடுக்க முன்னமே பவளத்திற்கு வேற ஒரு மாப்பிளையோட றெஜீஸ்ரேசன் ஆகி பின் ஏதோ பிரச்சினையிலே குழம்பிப்போச்சுது. காலம்தான்!!

பிறகு இவள் பாட்டுக்கு புங்குடுதீவிலை படிப்பிச்சுகொண்டிருந்தவளை கலியாணம் செய்துதாங்க, கலியாணம் செய்துதாங்க என்று அவளின்ர வீட்டிற்கு ஒவ்வொருநாள் காலையிலையும் போய் காவல் இருந்துதான் கலியாணம் முடிச்சான். பவளமும் ரௌசர் போட்ட மாப்பிளைதான் வேணும் என்றுதான் அவனை முடிச்சா. ஒரு பிள்ளையும் பிறந்து செத்துப்போச்சு. அது இருந்திருந்தாலாவது இவன் இதுபோல பவளத்தை விட்டுட்டு பிரிஞ்சு போயிருக்க மாட்டான். போனதுதான் போனான், எப்பவாவது திரும்பவந்து சேருவான் என்று பவளமும் அவன் சாகும்வரை பாத்திருந்தாள். பவளத்தின்ர முட்டாள்த்தனமோ தெரியேல்லை.

வருசம் போய்க்கிட்டே இருந்தது. அந்தநேரத்தில இருந்த புலிகளின்ர கோட்ஸ்ஸில டிவோசுக்கு கேஸ் போட்டான். பவளமோ டிவோசுக்கு மாட்டனென்டுட்டாள். முடிவில வழக்கு இவளுக்குத்தான் சாதகமாய் முடிஞ்சுது. தொடர்ந்து நாட்டுப்பிரச்சினை, இடப்பெயர்வு என்று ஆறு மாசம் ஓடிட்டுது.

யாழ்ப்பாணத்தை ஆமி பிடிச்ச பிறகு 1996இல் அரசாங்க கோட் ஆரம்பிக்குது. பவளத்தின்ட புருஷனோ ஓயல்லை. இந்த முறையாவது டிவோஸ் கிடைக்கும் என்று

திரும்ப கேஸ் போட்டான். பவளமோ நான் புருஷனோட சேர்ந்துதான் வாழுவேன் என்று ஒற்றைக் காலில் நின்றாள். தன்ர பெயருக்குப் பின்னாலே தான் சாகும்வரை அவனின்ர பெயரைத்தான் போடுவேன் என்ர பிடிவாதம். மேலும் ஊரில டிவோஸ் பண்ணிட்டு இருந்தா மரியாதை இல்லையே! வக்கிலின்ர சாமத்தியத்தால கிட்டத்தட்ட இரண்டு வருஷமா வழக்கு நடந்தது. வக்கிலுக்கும் உழைப்பு வேணும்தானே! கடைசியிலே அவனின்ட வக்கீலே நாங்க ஒற்றுமையாப் போறோம் என்று பல்டி அடிச்சிட்டான். கேஸ் முடிஞ்சுது. அடுத்தநாள் பேப்பரிலே முப்பது வருஷமாய் பிரிஞ்சிருந்த தம்பதியினர் ஐம்பது வயசில இணைகின்றனர் என்று செய்தி எதுகை மோனையோடை வந்தது. இதில என்ன விஷேசம் என்றா, பவளம் அவளின்ர புருஷன், இவர்களுக்காக வாதாடிய வக்கீல்கள் எல்லாரும் சொந்தக்காரங்கதான். கேஸ் முடிஞ்ச பிறகு பவளத்தை கூட்டிக் கொண்டு போய் அவளின்ர புருஷன் வீட்ட விட வக்கீல் இரண்டுபேரும் அன்று மாலை பவளத்தின்ர வீட்ட வந்திருந்தாங்க. பவளமும் ஏதோ விருப்பத்தோட அவர்களோட அவன்ர வீட்டுக்கு போனாள். ஆனால் வீடு பூட்டி இருந்தது. திரும்ப வந்திட்டாள். இதுபோல இரு தடவை நடந்தது. பிறகு எல்லாரும் ஓஞ்சு போனாங்க. அவனும் பவளத்தோட சேர வர இல்லை. சில வருஷத்துக்கு பிறகு அவன் வேற ஒரு பொம்பிளையை கலியாணம் பண்ணிட்டான்.

பவளமோ தானுண்டு, தன்ர வேலையுண்டு என்று தன்ர தங்கச்சியின்ர குடும்பத்தோட வாழ்ந்தாள். பென்ஷனுக்கு போம் கொடுக்கதான் பவளத்திற்கு அவன் கலியாணம் செஞ்சது மட்டுமல்லாது தன்னை டிவோஸ் பண்ணாமல் அவளை றெஜிஸ்டர் பண்ணியிருந்ததும் அந்த திருமணச் சான்றிதழையே பென்ஷனுக்கு கொடுத்திருப்பதும் தெரிய வருகுது. சட்ட விரோதம்தான். பவளம் நினைச்சிருந்தால் அவனை பொலிசிலே புடிச்சு கொடுத்திருக்கலாம். அவள் அப்படியெல்லாம் செய்ய இல்லை. பிறகு ஏதோ பயத்தால அவனே அந்த திருமணச் சான்றிதழை நிராகரிச்சிட்டான்.


இவனின்ட பென்ஷன் இவனுக்கு பிறகு பவளத்துக்கே உரித்தாகிறது. இப்ப அவனின்ட பென்ஷன் அவன் செத்த பிறகு பவளத்துக்குத்தான் வருகுது. அதுவும் பல போராட்டங்களின் பின்தான். அவனின்ர இரண்டாவது தாரத்தவள் தனக்கும் பென்ஷனில பாதியாவது வேணுமென்று முரண்டு பிடிச்சாள். அதிகாரிகளுக்கு ஒரே குழப்பந்தான். முடிவிலே பவளத்துக்கே சாதகமாய் தீர்ப்பாகிட்டுது. பவளத்துக்கு அந்த காசு ஒண்டும் பெரிசு இல்லை. இனி எல்லாம் தங்கச்சியின்ர குடும்பத்துக்குத்தான் என்று வாழுகிறாள். இப்ப தீராத வருத்தமும் பவளத்தோட பயணிக்கிறது. வலிகள் அவளுக்கு புதிசில்லை. சமூகம் பலமுறை பவளத்தை விழுங்க நினைச்சும் அவள் மருளவில்லை. தங்கச்சியின்ர பிள்ளைகளை தன்ர பிள்ளைகளைப்போல வளர்க்கிறாள். இப்ப அவளுக்கு வயசு எழுபது ஆகுது. அவளுக்கே தெரியாது அந்தப் பிள்ளைகள் அவளுக்கு முடியாத காலத்தில் அவளைப் பார்க்குமோ என்று. அந்த நேரத்திலே அவனை டிவோஸ் பண்ணிட்டு தன்ர எதிர்காலத்தை பார்த்திருக்கலாம். ஆனால் தன்ர பிடிவாதத்தாலே அவளே அவளின்ர வாழ்க்கையை பாழாக்கிப் போட்டாளா?

இல்லை.........

பவளத்தின்ர வாழ்க்கையோட விளையாட நினைச்சவன், அவன் சாகும் வரை தனெக்கென்று ஒரு வாழ்க்கையை அமைச்சுக்கொள்ள பவளமும் விட இல்லை, கடவுளும் விட இல்லை....

"வா அக்கா சாப்பிட"

தங்கச்சியின்ர குரல் கேட்குது.....






# பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கான காரணிகளும் அவை பற்றிய பார்வைகளும் ....

இலங்கையிலிருந்து வருடாந்தம் அண்ணளவாக பதினெட்டாயிரம் பணிப்பெண்கள் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றனர். மொத்த தேசிய வருமானம் ஈட்டித்தருவதில் வெளி நாட்டுப் பணிப் பெண்கள் முக்கிய இடத்தில் இருக்கின்றனர். இவ்வாறு செல்லும் பெண்கள் பாலியல் வன்கொடுமைகள், சித்திரவதைகள், குடும்பங்களுடன் தொடர்பாடலின்மை, வைத்திய பராமரிப்பு இன்மை, சத்தான உணவின்மை, உழைப்பிற்கான ஊதியம் இன்மை, ஓய்வற்ற தொடர் உழைப்பு போன்ற பிரச்சனை களுக்கு முகம்கொடுப்பதோடு அனேக சந்தர்ப்பங்களில் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலையும் செய்யப்படுகின்றனர்.

மத்திய கிழக்கில் றிஸானாவிற்கு வழங்கப்பட்ட மரண தண்டனை, வாகரை ஓம்மட்டியான்மடுவில் சாந்தியோகேஷ்வரன் (24வயது) 2009 ஆண்டு சவுதிக்கு சென்று 2013ஆம் ஆண்டு முதலாம் மாதம் இறந்ததாக அறிவிக்கப்பட்டு ஒன்பதாம் மாதம் சடலம் கொண்டு வரப்பட்டமை, மட்டக்களப்பு கறுவாக்கேணி வழைச்சேனைப் பகுதியினைச் சேர்ந்த காந்திமதி என்னும் 21 வயதுப் பெண் ஜோர்தான் நாட்டில் வீட்டு எஜமானனால் சுட்டுக்கொல்லப்பட்டு தற்கொலை செய்தார் எனக் கூறப்பட்டது, (தகவல் - க.ருத்ரா, வாழைச் சேனை) இலங்கையின் தெற்கு பகுதியில் உடதெனிய என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆரியவதி (வயது 49) எனும் பெண் ரியாத்தில் வீட்டுப் பணிப் பெண் ணாகச் சென்றவர் உடலில் மொத்தம் 27 ஆணிகள் ஏற்றி சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு ள்ளமை, கொம்மாதுறை, வழைச் சேனை போன்ற பகுதிகளில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்து திரும்பிய பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளமை, கொம்மாதுறையில் 43 வயதுடைய

தாய் மாரடைப்பினால் இறந்ததாகக் கூறப்பட்டு சவூதியிலிருந்து சடலமாக அனுப்பப்பட்டமை போன்ற தகவல்கள் இப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை எமக்குச் சொல்கின்றது.

கணவனால் கைவிடப்பட்ட, கணவனை இழந்த பெண்கள், அதிக எண்ணிக்கைகளைக் கொண்ட குடும்பங்களின் தாய்மார்கள், குடும்பத்தில் மூத்த பெண் பிள்ளை போன்றோர் அதிகம் வெளிநாடு செல்கின்றனர். ஊர்களில் உள்ள தரகர்கள் இத்தகைய பெண்களை இனங்கண்டு அவர்களுடன் தொடர்பு கொண்டு பல வாக்குறுதிகளை பிரச்சாரங்களாக குடும்பத்திற்கு வழங்கி பெண்களை அனுப்பி வைக்கின்றனர். குடும்பங்கள் இவர்கள் வாக்குறுதிகளை நம்புகின்றன. பெண்களில் அதிகமானோர் தரகர் மூலமாகவே அனுப்பப்படுகின்றனர்.

இவர்கள் முற்பணமாக 25000 – 100000 வரையிலான தொகையினைப் பெற்று, இரண்டு வருட உடன்படிக்கையில் செல்கின்றனர். உரிய வயதைப் பூர்த்தியடையாத பல பெண்களை தரகர்கள் வயது கூட்டிக் காட்டி போலியான கடவுச்சீட்டுக்களில் அனுப்புகின்றனர். இவ்வாறு செல்லும் பெண்களின் பாதுகாப்பு என்பது பிரச்சனைக்குரியது. இப் பெண்களுக்கு பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இவர்களுடன் தொடர்பு கொள்ளல், நஷ்ட ஈட்டினைப் பெற்றுக் கொடுத்தல் என்பது சிக்கலான விடயமாகிறது. இத்தகைய பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படாதிருக்கும்போதே தொடர்ந்தும் இவ்வாறு பெண்கள் செல்வதற்கான காரணங்களாக எமது உள்ளூர் சூழல் காணப்படுகிறது.

**மத்திய கிழக்கு நாடுகளின் வேலை வாய்ப்பும் செல்வாக்கு செலுத்தும் உள்ளூர் நிலமைகளும்:**



நீண்டகாலப் போரானது, பெண்களிடம் நிலையாக இருந்த பொருளாதார நடவடிக்கைகளையும், நிலையான சுயதொழில் முறைகளையும் இல்லாமல் செய்துள்ளது. இதனால் கடன்தொல்லை, வறுமை, பாரம்பரிய சுய தொழில் முறைகள் இல்லாமல் போதல் (மாடு வளர்ப்பு. உள்ளூர்க்கோழி வளர்ப்பு, மீன்பிடி. விவசாயம். சிறுகடை. பனம் பொருட்தொழில்கள்) அத்துடன் குடும்ப உறுப்பினர்களின் இழப்பு, சொத்துக்களின் இழப்பு, இடம்பெயர்வுகள் போன்ற காரணிகள் பெண்களை தனிமையானவர்களாக மாற்றியுள்ளது.

மனிதர்கள் தாங்கள் நிரந்தரமாய் வாழும் நிலங்கள் பற்றிய புரிதலைக் கொண்டு அவர்களது வாழ்வியலை உருவாக்கிக் கொள்கின்றனர். மீன்பிடி கிராமங்களை அண்டி உள்ள பகுதிகளில் வாழும் பெண்களின் மிகப் பிரதான தொழிலாக மீன் கூடுகளைப் பின்னுவது, கருவாடு போடுதல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். இதற்குரிய சந்தை வசதிகளையும் வளங்களையும் கொண்டதாக அவர்கள் வாழும் நிலங்கள் காணப்பட்டன.

மட்டக்களப்பு பகுதியில் நிலம் என்பது தாய்வழிமூலமாக மகளுக்கு பரிமாறப்பட்டு வருகின்ற வழக்குண்டு. இவ்வாறு நில உரிமை பெண்களுடன் இணைந்த போக்காக இருக்கையில், இடப்பெயர்வுகள் இதனை மாற்றியமைப்பதாக உள்ளன. அரசால் வழங்கப்படும் காணிகள் ஆண்களின் பெயர்களில் (குடும்பத்தலைவர்) பதிவு செய்யப்படுகின்றன. இத்தகைய நிலை பெண்களின் பொருளாதார நிலையை, பெண்களின் வாழ்வாதாரங்களை உழைப்பிற்கான வளங்களை இல்லாமல் ஆக்கி மேலும் வறுமைக் கோட்டிற்குள் இவர்களைக் கொண்டு சென்றது.

இன்றைய சூழலில் பல அமைப்புக்கள் (அரச சார்பற்ற உள்நாட்டு வெளிநாட்டு அமைப் புக்கள், வங்கிகள்) சுயதொழிலுக்கான கடன் களை வழங்குபவைகளாக ஊர்களில் செயற்படு கின்றன. இவை பரவலாக சுயதொழில் கடன்கள், வீடுகட்டுவதற்கான கடன்கள் போன்ற கடன் திட்டங்களை வழங்குகின்றன. இக்கடன் திட்டங்கள் மாதாந்த தவணைக் கடன்களாக அறவிடப்படுகின்றன. 10%, 15% கடன் திட்டங் களாக உள்ளன. 10,000ரூபாய் தொடக்கம் 100,000 ரூபாய் வரை கடன்கள் கொடுக்கப் படுகின்றன. மாதாந்தம் 1000ரூபாய் தொடக்கம் 5000ரூபாய் வரை வட்டியுடன் அறவிடப்படுகின்றன.

அத்தோடு வீட்டிற்குரிய தளபாடப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள். அடுப்புக்கள் போன்றவைகளும் மாதாந்தக் கடன் மூலம் வீட்டிலிருந்தவாறே பெற்றுக் கொள்ள முடியும். பொருட்களை தரகர்கள் மொத்தமாக பெற்று ஊர்களில் இருப்பவர்களுக்கு விற்கின்றனர். இப் பொருட்களை பெறும் தரகர்கள் ஊர்களிலிருப் பவர்களுக்கு மாதாந்த தவணைக்கட்டண அடிப்படையில் கொடுக்கின்றனர். இவ்வாறான கடன் தொல்லைகள் மட்டக்களப்பு பகுதிகளில் தற்கொலை மனஅழுத்தம் போன்ற பிரச்சினை களுக்கும் இட்டுச் சென்றுள்ளது.

குறிப்பாக சிறு தொழில் செய்வோர்கள், கூலிவேலை செய்வோர்கள் இத்தகைய கடன் களை முதலாகவும் வட்டியாகவும் தொடர்ந்து கட்டுவதனால் மேலும் வறுமைக் கோட்டிற்குத் தள்ளப்படுகின்றனர். வட்டி முதல் அதிகரிக்கும் போது இக்கடன்களை கட்டுவதற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லுகின்றனர். மற்றும் நிறுவனங்களில் கடன் பெற்று தன் கணவன்மார் களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பு கின்றனர். பின் அக்கடன்களை கொடுப்பதற்கு முன்பே வேலைச்சிரமம், ஊதியம் வழங்காமை போன்ற காரணிகளால் ஆண்கள் நாடு திரும்ப கடன்களை அடைப்பதற்கு பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்கின்றனர். பெண்கள் செல்வதற்கு ஆண்கள் போன்று அதிக பணம் தேவைப்படாததும் கணவன் வீட்டிலிருக்க மனைவி வெளிநாடு செல்வதற்கு ஒரு காரணமாகின்றது.

அத்தோடு இன்றைய உலக மயமாக் கலில் செல்வாக்கு செலுத்தும் பொருளாதார சிந்தனைகளும் முறைமைகளும் சாதாரண மக்களை வறுமைக் கோட்டிற்குள் தள்ளி உள்ளது எனலாம். மட்பாண்ட பொருட்கள், வெண்கலப் பொருட்கள் போன்ற பொருட்களுக்குப் பதிலாக இறப்பர், அலுமினிய பாத்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இது இயந்திர பாரிய உற்பத்திப் பொருளாதாரமாகும். அத்தோடு விலை குறைந் ததாகவும் நீண்டகாலப் பாவனைக்குரியதாகவும் உள்ளது.

குறைந்த விலை, நீண்டகால பாவனை, அழகு தன்மை போன்ற காரணிகளை மையப் படுத்தி பொருட் கொள்வனவுகள் தீர்மானிக்கப் படுகின்றன. தேவைக்கான பொருட்களின் உற்பத்தி என்பதற்கு மாற்றாக பாரிய உற்பத்தி, பாரிய சந்தை என்பன அமைகின்றது. உற்பத்திகளின் விலையைத் தீர்மானித்தல் என்பது பெரும் முதலாளிகள் சார்ந்தவையாக உள்ளது. இத்தகைய உற்பத்திகளில் நுகர்வோர்களைக் கவர்தலே முக்கியமானது. உள்ளூர் பொருளாதாரம் என்பது நுகர்வினை மட்டும் கொண்டதல்ல. மக்களின் வாழ்வோடும் நம்பிக்கைகளோடும் சடங்குக ளோடும் தொடர்புடையனவாக காணப்படு கின்றன. ஊர்சார்ந்த கால நிலைகளோடும் அறிவியல் முறைகளோடும் தொடர்புடையதாக காணப் படுகின்றன. இத்தகைய தன்மை கொண்ட உள்ளூர் உற்பத்திகள் பாரிய இயந்திர உற்பத்திகளினால் அவற்றின் சந்தைப்படுத்தல்களினால் இல்லாமல் செய்யப்படுகின்றன.

உள்ளூர்ப் பொருட்களின் தேவையினை இறப்பர் பொருட்கள் நிரப்புகின்றன. பிரம்பு, ஈச்சம் மரங்களினால் செய்யப்படும் மீன் கூடுகளுக்கு பதிலாக கம்பிகளினால் மீன் கூடுகள் பின்னப்படுகின்றன. பனை, பன் போன்றவற்றின் பாவனைக் காலம் இறப்பர் பாவனையை விடக் குறைவு. ஆனால் இயற்கை சூழலுக்கு அச்சுறுத் தலானது. இவை கவனிக்கப்படுவதில்லை.

இவற்றின் பாவனை மட்டுமே முக்கியமான தாகிறது. ஈச்சை பிரம்புகளால் பின்னப்படும் கூடுகள் நீரினுள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இயல்பாக அழியக் கூடியவை. ஆனால் இரும்பு கம்பிகளை பாவித்துப் பின்னப்படுபவை அச் சூழலுக்கு அழுத்தலானது. இத்தகைய சிறு உற்பத்திகளை இல்லாமல் செய்வதனால் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன.

வாழ்வாதாரப் பிரச்சினைகள் பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முக்கிய காரணியாக உள்ளது.

*பெண்களை வீட்டுவேலை, குழந்தை வளர்ப்பு என குடும்பம் சார்ந்தவர்களாய் மட்டும் பழக்கப்படுத்தி வந்த சமூக அமைப்பில் இவ்வாறான சூழலானது அவர்களை முழுக் குடும்ப பொறுப்புடன் பொது வெளி நோக்கி திடீரென தள்ளும் சூழலை ஏற்படுத்துகின்றது. இச் சந்தர்ப்பத்தில் தனக்கான முழு நிலையான வருவாயைப் பெறுவதற்கான பிரதான வழியாக "வெளிநாட்டு வேலை வாய்ப்பு" எனும் விடயத்தைப் பெண்கள் தெரிவு செய்யும் சூழல் காணப்படுகிறது.*

இவ்வாறு வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் சென்று பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் தொடர்பாக பல அமைப்புக்கள் செயற்படுகின்றன. குறிப்பாக மட்டக்களப்பில் மனித உரிமை ஆணைக்குழு - மனித உரிமைகள் தொடர்பாக வேலைகள் செய்து வருகின்றது. அரசு சார்ந்த அமைப்புக்களான மட்டக்களப்பு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் என்பவற்றோடு மட்டக்களப்பு பிரதேச செயலகத்தில் வெளிநாட்டுப் பணிப் பெண்கள் தொடர்பான பிரிவும் இயங்கி வருகின்றது. வெளிநாட்டுப் பணிப் பெண்கள் தொடர்பாக இரு வருடங்கள் வேலை செய்து வரும் அரச சார்பற்ற அமைப்பின் அலுவலகர் ராகினி பாஸ்கரன் கூறுகையில், இதுவரை 200 இற்கும் மேற்பட்ட வழக்குகள் வந்துள்ளதாகவும் அவற்றில் 90 வழக்குகளுக்கே நஷ்ட ஈட்டினைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததாகவும் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.கமலதாஸ் தெரிவிக்கையில் "பெண்கள் வீட்டுப்பணிப் பெண்களாக வெளிநாடு செல்வதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து கிழக்கு மாகாணம் தழுவிய வகையில் ஒரு இலட்சம் பேரிடம் கையொப்பங்களைப் பெற்று அரச தலைவர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சருக்கு அனுப்புவதாக தெரிவித்தார். (Tamil win news/ தினக்கதிர்)




மேலும் போலியான கடவுச்சீட்டுக்களில் செல்வோருக்கு பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் அவர்களை கண்டிப்பதும் நாட்டிற்கு எடுப்பதும் சிக்கலானது எனத் தெரிவித்ததுடன் கரடியனா றினைச் சேர்ந்த பெண்ணை மட்டக்குழியில் வசிப்பவராக கடவுச்சீட்டு எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்ப முகவர் எடுத்த முயற்சி அக் குடும்பத் தாரின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டு அப் பெண் வெளிநாடு செல்வதைத் தடுத்ததாகக் கூறினார். பதியப்படாத தரகர்கள் மூலம் அனுப்பப் படும் பெண்களுக்கு பிரச்சனை ஏற்படும் போது நஷ்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்க முடியாது ள்ளதாகக் தெரிவித்தார்.


பணிப்பெண்களாக வேலை செய்யும் தளங்களில் அவர்களுக்கு பிரச்சினை ஏற்படும் போது அதனை அவர்களது குடும்பத்தினர் மூலம் அறிய நேர்ந்தாலும் அவர்களுக்கான பாதுகாப்பினை செய்யமுடியாத சூழல் காணப்படுவதாக தெரிவித்தார். உள்ளூர் பொலிஸ் நிலையங்களில் வழக்காகப் பதியப்பட்டு பின்னர் தாங்கள் அதனை வெளிநாட்டு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் வழக்காகப் பதிவு செய்த பின்னரே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

வெளிநாட்டிற்கு அனுப்பும் ஊர்களிலுள்ள தரகர்கள் கொழும்பில் இருக்கும் முகவர் என ஒரு வலையமைப்பு காணப்படுகின்றது. இவர்கள் பதிவு செய்யப்படாதவர்களாகவும் காணப்படுகின்றனர். பதிவு செய்யப்படாத தரகர் மூலம் செல்லும் பெண்கள் தாங்கள் எந்த நாட்டிற்குச் செல்கின்றோம் என்றும் பாதுகாப்பு சிக்கல்கள் ஏற்படும் போது அதற்கான பாதுகாப்பு ரீதியான நடவடிக்கைகள் எவ்வாறு எடுத்தல் போன்ற போன்ற புரிதல்கள் அற்றவர்களாகவே செல்கின்றனர்.

அத்துடன் இவர்கள் வேலை நிமித்தம் உறுதிப்படுத்தும் பத்திரம் அரபிய மொழியிலும் ஆங்கில மொழியிலும் காணப்படுகின்றது. இருவருட ஒப்பந்தம் பற்றிய எந்தவித அறிமுகமும் இல்லாதவர்களாக தாம் வேலை செய்யும் இடம் பற்றிய தகவல்கள் தெரியாதவர்களாகச் செல்கின்றனர். பதியப்பட்ட வலைப்பின்னல் மூலம் அனுப்பப்படும் போது இருவருட காப்புறுதி எடுத்துச் செல்லப்பட்டவர்களானால் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொள்ளும் நிலையுள்ளதுடன் அவர்களுக்கான வைத்திய செலவு போன்றவற்றினையும் அரசாங்கம் பொறுப்பெடுக்கும் நிலையுள்ளது.

(இக்கட்டுரை இலங்கையில் கிழக்குப்பகுதியினை அடிப்படையாக கொண்டு அமைந்தது)

~ கலைமகள்



பறக்கும் நினைவுடன்
ஆசையில்
படபடக்கும் என் சிறகுகள்

சூடானகாற்றின்
இதம் தேடி.....
நத்தைகளும் நண்டுகளும்
காலெல்லாம் ஊரும்.

இதுவரை,
எனைச் சுமந்து
பறக்காதசிறகுகளுடன்..
முயற்சிகள் தொடர....

மீண்டும் விரியும்
என் சிறகுகள்
படபடப்பாய்....

விஜயலட்சுமி சேகர்




அன்று காலை ஐந்துமணி இருக்கும். வயலில் இருந்து வரும் மிசின் சத்தம் அவ் வீட்டை எழுப்புகிறது. தாய், வீட்டினது முன் படலையினைத் திறந்து குசினி செல்லும் பக்கம் செல்கிறாள். அப்போது வடக்கே உள்ள வயலில் ஒரே புளுதி படர்ந்திருந்தது. அதனுள் தூரத்தில் சிறு உருவமாய் அவளது மகன் மிசினுடன் வயலை உழுது கொண்டிருந்தான். அப்படியே சிறிது நேரம் அங்கேயே உறைந்து விடுகிறாள். பின் தன்னை சுதாகரித்துக்கொண்டவளாக அங்கிருந்து குசினியை நோக்கி நகர்கிறாள். ஆனால் இன்னும் வயலில் புழுதி அடங்கவில்லை.

"............ அங்கே அவன் கடுமையாக உழைக்கிறான். அவனது வியர்வையில் அப் புழுதி சிறிது கரைகிறது. ஆனால் எங்கும் புழுதி மூட்டம்தான். நீண்டநாள் மழை இல்லை. வயலில் ஏற்கனவே விதைத்தவையும் கருகிவிட்டது. ஒருபோகத்தில் மட்டும் கட்டைப்பறிச்சான் குளத்தடிப்பாகத்தில் விதைக்க முடியும். அப்போது மட்டும் குளத்தை நம்பி விதைக்க முடியும். மற்றைய போகத்தில் மழையை நம்பித்தான் வாழ்க்கை. ஆனால் இன்று காலநிலையும் ஒத்துழைக்கவில்லை. கிணத்திலும் தண்ணீர் குறைஞ்சிட்டுது. முந்தநாள் ஓரளவான தூறல். தொடர்ச்சியாக மழை பெய்யும் என்று எதிர்பார்த்தும் ஏமாற்றந்தான் மிச்சம். ஆனாலும் அந்த ஈரலிப்பிலே ஏதாவது விதைச்சிடலாம் என்றும் நாளைக்கு மழைவரும் என்ற நப்பாசையிலும் வயலிலை இறங்கி உழ ஆரம்பிச்சிட்டான். இதே வயலிலதான் ஏற்கனவே ஒருமுறை கச்சான் போட்டான். அந்தநேரம் சந்தையில கச்சான் நல்ல விலையாத்தான் இருந்தது. நல்ல லாபம் வந்திருக்கும். ஆனால் இந்த புறோக்கர் முதலாளிமாரிட்ட ஒட்டுமொத்தமா வயலோட பேசி விற்றதால எல்லா லாபமும் அவங்களோட போச்சுது. இதைப்போல எத்தனை பேர்? இந்தமுறையும் திரும்ப உழுகிறான். எதையோ விதைக்கிறதுக்கு. இந்த முறைக்கு எந்த தரகருக்கு கொடுத்து வைச்சிருக்குதோ!! ஆனால் வரட்சிதான். உழுததிலே புழுதி கிளம்பிவிட்டது........"

இவளது மகன் களைப்படைந்தவனாய் மிசினை நிப்பாட்டிவிட்டு மரத்தடியில் அமர்கிறான். அவனது மனமும் அப்புழுதியைப்போல அடங்கவேயில்லை........

"கம்பசிலை படிச்சு என்ன பயன்? பாஸாகி இரண்டு வருஷமாகிட்டது. இன்னும் வேலை கிடைக்கவேயில்லை. எத்தனையோ வேலைக்கு எக்சாம் எழுதினனான். பலன்

இல்லை. எக்சாமுக்கு போம் போடவாவது காசுவேணும். வீட்டில நாலு ஆம்பிளைப் பிள்ளைகள். மூத்தவன் என்றாலே பொறுப்பு அதிகம்தான். தம்பியை நம்பி அவன் காதலிச்ச பிள்ளைவேற இப்ப எங்களோடதான். தம்பியோ தனக்கென்று தனிக் குடும்பம் வந்த பின் உழைக்கிறதுக்கு சவுதி போயித்தான். இன்னொரு தம்பியோ குடும்ப கஷ்டத்தை கொஞ்சமாவது சமாளிக்க வேண்டுமென்று கொழும்பிலே ஒரு கொம்பனியிலே வேலைக்குச் சேந்திற்றான். கடைசி தம்பியோ படிப்பை குழப்பித்து விளையாடித் திரிமிறான். பொறுப்பு உணராத வயது அவனுக்கு……

"நான்… இந்த வருஷமாவது வேலை வருமென்று காத்திருந்ததுதான் மிச்சம். நான் மட்டுமா? எனக்காக எத்தனைபேர்? அம்மா, அப்பா என்ர தம்பிகள்….. எத்தனைபேர்? ம்ம்....அவள்? இல்லை இல்லை…. இப்ப அவள் எங்கே!!!!! கம்பசிலே பாசவுட்டாகும் போது வந்த காதல். பாசவுட்டான பிறகும் அவளுக்காக மட்டக்களப்பு கம்பசிற்கும் அவளுடைய வீட்டிற்கும் யாழ்பாணத்திற்கும் அடிக்கடி போயிருப்பேன்".

பெருமூச்சு விட்டபடியே

'என்ன செய்ய? வேலை ஒன்றில்லையே?? வேலை இருந்திருந்தாலாவது அப்பா அம்மாவோட நேரில போய் அவளின்ர வீட்ட கதைச்சிருக்கலாம். வேலை கிடைக்கவில்லையே?......

...... முப்பது வயசாகிறது. ரீச்சிங் கோல்பண்ணியிருந்தும் போட விருப்பமில்லை! ஐந்துவருஷமா கம்பசில் படிச்ச படிப்புக்கு ரீச்சிங்கா? வேற தொழிலும் இல்லை!! இருக்கிற மண் வீடோ எங்க ஆறு பேருக்குமே போதாது. என்னோட கம்பசிலே படிச்ச நண்பன் வீட்டிற்கு வந்திருந்தபோது கூட அவனை பக்கத்திலே இருந்த சிஸ்ரேஸ் கோமிலதான் தங்கவைச்சனான். எங்களோட ஒன்றா தங்க வைக்கமுடியல்ல. தம்பி இப்போ தனி குடும்பமாகிட்டான். புதிசா கல் வீடு கட்டத் தொடங்கி எவ்வளவு காலமாய் வேலை நடக்கிறது?? கோப்பிச வேலை மட்டும் முடியேல்லை. இடையிலே இரண்டாவது தம்பிக்கு வந்த வருத்தத்திற்காக நிறையவே செலவளித்து மட்டக்களப்பு சாமியார் வரை கொண்டு போய் அவனுக்கு காவல் செய்தது. வேற வைத்தியமும் நிறைய பார்த்தது. அதிலேயே நிறைய காசு செலவாகிப்போச்சு.

…… இப்ப வீட்டுவேலையை தொடர தம்பி வெளிநாட்டிலே இருந்து உழைச்சனுப்பினால்தான் முடியும். அதுவரை செலவுக்குத்தான் உழைக்க முடிகிறது. அப்பாவோ பியோனா இருந்து கந்தோரில இருபத்தைந்து வருசமா உழச்ச காசிலைதான் வீடு கட்டினவர். அவருக்கு வயசு. அந்த நேரம் எனக்கு யாழப்பாணத்திலே கொலேஜ் ஒவ் எடியுக்கேசன் கிடைச்சது. அங்கபோயிருந்தாலாவது இப்ப வேலைதான். அன்றைக்கிருந்த நாட்டுப் பிரச்சினையிலே யாழ்ப்பாணம் போய் படிக்கமுடியேல்ல.......

"தம்பி, தம்பி....."

திடீரென்று தாயின் குரல் கேட்கிறது.

"நிரோமி, சூசையப்பர் கோவில் மணிகேக்குது. நேரமாகித்து. முகத்தை கழுவித்து சாப்பிடு. ஸ்கூலுக்கு பிள்ளைகளை ஏற்றவேணும்..........

"…………….. லீசிங்கிலை எடுத்த ஆட்டோ இது. மாசாமாசம் ஒரு தொகை வரும். அதுக்கு லீசிங் கட்டவாவது ஸ்கூல் ஹயர் போனால்தான். மற்ற நேரங்களில் எல்லாம் முருங்கன் ஆட்டோ ஸ்ரான்ட்டிலதான் ஹயருக்காக காத்திருக்க வேண்டும். ஆட்டோ ஸ்ரான்டுக்கு பக்கத்திலே ஒண்ட விட்ட அண்ணாவோட கடை இருக்கு. அண்ணா வெளியால போகும்போதெல்லாம் என்னத்தான்

கடையை பார்க்கச் சொல்லித்துப் போவார். சம்பளம் இல்லாததொழில்............

"நிரோமி இன்னும் அங்க என்ன செய்கிறாய்?"

மீண்டும் தாயின் குரல் சற்றே சத்தமாகக் கேட்குது.

தனது சிந்தனையிலிருந்து சுதாகரித்துக் கொள்கிறான். அப்போதுதான் வயிறு காந்துவதை உணர்கிறான். பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது நேரத்துக்கு சாப்பிடாமல் விட்டதால் வந்த அல்சர். இப்போது வலியை உணர்கிறான். மரத்தடியிலிருந்து எழுந்து உழவு இயந்திரத்தை கிணற்றடியில் நிப்பாட்டி விட்டு அதில் ஒட்டியிருந்த புழுதியை கழுவி பின் தானும் தன்னைச் சுத்தம் செய்துகொண்டு காலைச் சாப்பாட்டை விரைந்து சாப்பிட்டு முடித்து கதவில் தொங்கிக் கொண்டி ருந்த ஆட்டோ திறப்பை பார்த்து ஒரு பெருமூச்சு விட்டபடியே எடுக்கிறான். அடுத்த உழைப்பை நோக்கி அவனது ஆட்டோ வேகமாக படலையைத் தாண்ட... அவன் சென்ற திசையை குசினி வாசலில் நின்றபடியே அவன் தாய் நோக்குகிறாள். ஆட்டோ சென்ற வேகத்தில் முத்தம் முழுவதும் புழுதி




ஸ்ரீ வாகீசன்

# சிந்தியுங்கள் .......

இல்லறம் ஒரு வண்டி எனில்
இழுப்பதற்கு இருவர் தேவை
ஒற்றை மாடாகப்
பெண்ணிருந்தால் அவள்
உள்ளமும் உடலும்
சோர்வடையும்

நங்கையாய்ப் பிறந்தால்
நான்கு மணிக்கு எழுந்து
தன்கையால் வேலை செய்யும்
தலைவிதியை யார் வகுத்தார்?

உத்தியோகம் பார்க்கும் பெண்ணின்
உடலென்ன கல்லா? இரும்பா?
களைப்பு, சோர்வு வருவதில்லையா?

வீட்டுத் தலைவனோ
ஏழு மணிவரை தூங்கிவிட்டு
காப்பி கேட்டுக் கத்துகிறான்

அடுப்பில் கறிவைத்து
அவசரமாய் சமைக்கும் போது
உடுப்பெங்கே என்று கேட்டு
உறுக்குகிறான் மனைவியை

மனைவியோ
வேலை விட்டு வந்து
சேலை மாற்றாது
சமையலறைக்குள் செல்கிறாள்
கடுகதியாய் வேலைசெய்ய

கணவனோ
அலுவலகத்தில்
வேலை அதிகம்
அலுப்பாக இருக்கிறது
சாப்பாட்டை எடு என
சாய்கிறான் கட்டிலில்

சிந்தித்துப் பாருங்கள்
சீராகுமா இல்லம் ....?



தம்பிலுவில் ஜெகா

# யானை செத்தாலும் ஆயிரம் மனிசன் இருந்தாலும் ......?



மட்டக்களப்பின் படுவான்கரை தாண்டி வாழ்ந்து வரும் சந்திரா மூன்று பிள்ளைகளின் தாய். இன்றிருப்பவர் நாளை இல்லை என்னும் அதிசயம் நடக்கும் நாட்டில் சந்திராவின் வீட்டிலும் அன்று அந்த அதிசயம் நடந்தது. மாலை நேரம் அப்பொழுதுதான் உயிரை விட்ட தந்தைக்கு அருகில் மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றி சந்திராவின் கணவன் காவல் இருக்க, உறவுகளிடம் தகவல் சொல்லிவிட்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கையில் நெருப்புப் பந்தத்துடன் வயல் வெட்டைகளுக்கூடாக சந்திரா வீட்டை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கிறாள். வளவிற்குள் வந்து சாத்தியிருந்த கதவைத் திறந்தவள் மனதை ஏதோ பயம் பிடிக்கிறது. எரிந்துகொண்டிருந்த விளக்கில் வெளிச்சம் இல்லை. எங்கும் இருள். மயான அமைதி. பந்தத்தின் வெளிச்சத்தில் விறாந்தையைப் பார்க்கிறாள் மாமானாரின் உடல் தனிமையாய் கிடக்க கணவன் இருந்த இடம் வெறுமையாய் இருக்கிறது.

இது நடந்து இன்றுடன் எட்டு வருடங்களுக்கு மேல். பின்னர் கணவனது பெயர் காணாமல் போனவர் பட்டியலின் நீளத்தை அதிகமாக்க எந்தவித வசதிகளுமற்ற கிராமத்தில் தனது முயற்சியினால் தனிமை தொலைத்து பிள்ளைகளுடன் வாழ்ந்த வரும் சந்திராவை ஓர் மழை நாள் ஒன்றின் மாலை வேளையில் சந்திக்கக் கிடைத்தது. நாங்கள் நின்ற இடத்தைச் சுற்றி கரடியன் குள நீரோடை ஓடிக்கொண்டிருந்தது. புறப்படப்போன நேரத்தில் "போற வழியில சில வேளை யானைகள் மறிக்கும் பாத்துப் போங்க" எனும் சந்திராவின் வழியனுப்பலில் "யானையா...? என யானைக் கதையும் அவற்றுடன் ஆன அவள் தொழிலும் போராட்டமும் தொடங்கியது. காதுகள் கூர்மையாக இருளை மறந்தோம். ஆற்றையும் காட்டையும் சேர்த்தே மறந்தோம்.

**யானைக் கதை**

"போன வருசம் எட்டாம் மாதம் இருக்கும், நானும் பிள்ளைகளும் பொழுதோட நித்திரை

கொண்டுத்தம். இரவு 11 மணியிருக்கும் எனக்கு மேசையில உரசிற மாதிரி "வராச்" என்றொரு சத்தம். நான் நினைச்சன் பிள்ளையள்தான் மேசைக்கு உதைக்குதுகள் என்று "இடியே மேசைக்கு உதைக்காதியள் மேசையில பூவாஸ் எல்லாம் இருக்கு விழுந்து உடைஞ்சிரும்" சொல்லிப் போட்டு நான் திரும்பிப் படுக்கல்ல திரும்பியும் அந்தச் சத்தம் கேட்குது. பிறகு நெல்லு கொட்டுப் படுற சத்தம். என்னடா சத்தம் என்று போட்டு மண்ணெண்ணைய் லாம்ப தூக்கிப் பாக்கன், பிள்ளையள் படுத்த படுத்த மாதிரியே படுக்குதுகள். திரும்பியும் அந்தச் சத்தம் கேட்க, எனக்கு என்ன யோசனை வந்திச்சோ தெரியல்ல குசினிக் கதவ திறந்தித்து வெளியால வந்தன்.

வந்து அங்காலையும் இங்காலையும் திரும்பி திரும்பிப் பார்த்தன்.

முன்னால ஒரு உலகம் நிக்காரு. உடனே ஆ..... ஆ...... என்று கத்திற்று. இங்கால திரும்பினன் எனக்கு கையில கிடைச்சது விளக்குமாறுதான். எடுத்து குடுத்தன் அடி அவருக்கு. இரண்டு அடி அடிச்சதோட விளக்குமாறு உடைஞ்சித்து. அதோட அவர் கத்தின சத்தத்தில எனக்கு காதெல்லாம் அடைச்சி என்ன செய்யிற என்டு தெரியாம நான் அவடத்தையே நிண்டன். அவரிட தலையில இரண்டு பக்கமும் பெரிய வாழைக் குலை தட்டுது. நாங்க ரெண்டுபேரும் அப்படியே நிக்கிறம். பிள்ளைகள் எல்லாம் அவர் போட்ட சத்தத்தோட பின் கதவால வெளிய.

ஒரு சின்ன இடைவெளிக்குள்ள யானை. யானைக்கு பக்கத்தில வாழை. அதின்ர காலுக்குள்ள நான். அவரிட கை என்ன நோக்கி வாற வடிவ பாக்கனுமே நொழு நொழு என்று மெது மெதுவா வருகுது. எனக்குக் கிட்ட வந்ததும் திரும்பி மேல போற .... இப்படியே.... திரும்பித் திரும்பி எனக்குக் கிட்ட வாறதும் மேல போறதுமாய்; அவரிட காது அடிக்கக்குள்ள பாக்கனும் அதில இருந்து வாற காத்து எனக்குப்படும். அதுர காதுக்குள்ள இலையான் நுளம்பு எல்லாம் இரையிர மாதிரி சத்தம் கேட்கும்.

மகன் கத்துறான்

"அம்மா வாங்க",

மருமகன், "மாமி திரும்பி ஓடிவாங்க"

பொம்பிள பிள்ளைகள்

"அம்மா வாங்க திரும்பி வாங்க..... என்று. எனக்கு திரும்பி போற யோசனையே வரல்ல. ஏனென்றா காது அடைச்சிற்று, எனக்குத் தெரியும் ஓடினா என்னத் தூக்கி எறிஞ்சி லேசா மிதிக்கும் என்று.

அப்ப மகள் பக்கத்தில இருந்த பூவாளிய எடுத்து யானைக்கு எறிஞ்சாள். உடனே அது அத கையால வாங்கி சுத்திப் போட்டு காலால ஒரு அடி. பிறகு மகன், தண்ணி எடுத்து வைச்ச ஒரு பெரிய பானை இருந்தது அந்த தண்ணிய ஊத்திப் போட்டு யானைக்கு எறிஞ்சான். உடனே அத பிடிச்சி காலுக்கு கீழ போட்டு ஒரு மிதி. அது நசிஞ்சி சப்பையா பொயித்து. இன்னம் நாங்க ரெண்டு பேருமே நிக்கம். எனக்கு எண்ணம் நாம ஓடினா நம்மள பிடிச்சி காலுக்கு கீழ போட்டு கட்டாயம் மிதிக்கும். ஓடிப்போய் அடிபட்டு சாகிறத விட ஒரு இடத்த நின்று வாதாடி செத்தா லும் பறவால என்ற யோசனையோட நான் அப்படியே நின்றன். பிள்ளைகள் தள்ளித் தானே நிக்குதுகள்.



அது ஒரு தென்பு, பிள்ளைகள் தப்பினாபோதும் என்ற யோசனை. நாம செத்துத்ததும் என்று மனசுக்கு நல்லா பட்டுத்து. அந்த நேரம் தம்பி என்ன செய்தான் என்டா யான வெடிய கொழுத்தி ரெண்டு பேருட காலுக்குள்ளையும் எறிஞ்சான். ரெண்டு பேருட காலுக்குள்ளையும் எறிஞ்சதால வெடி இரண்டு பேருக்கும் மண்ண அள்ளி எத்திச்சி.

நான் இப்ப கதைக்கக்குள்ள கொஞ்ச நேரத்தில கெதியா முடிச்சித்தன். ஆனா இவ்வளவு புதினமும் நடந்தது முக்கால் மணித்தியாலத் திற்கு கூடத்தான் இருக்கும். எங்கட அத்தான் பள்ளிக்கு அங்கால இருந்து வரவேணும். அவருக்கு பிள்ளைகளிட சத்தம் கேட்டிருக்கு. அவர் சொல்லியிருக்காரு,

“சந்திராட வீட்ட யான பூந்துத்துப் போல, பிள்ளைகள் எல்லாம் கத்துகள்'' அப்படியே சொல்லித்து வாய்க்காலுக்குள்ள போன தண்ணி கடந்து வீட்டுக்கு பின்னால வந்து என்ன சத்தம் போட்டாரோ தெரியல்ல, அவர் வந்தவுடனே பின் னுக்கு பின்னுக்கு யானை போகுது; யான வெடி யும் போட்டதானே. பின்னால போய் திரும்பி வந்து ஜன்னலுக்குள்ளால கையப்போடுது. அப்ப வந்த அண்ணன் வீட்டுக்கு பின்னால சத்த வெடி வைக்க அந்த சத்தத்த கேட்டு கத்தித்து ஓடினது ஓடினதுதான். அதுக்குப் பிறகு இஞ்சால இல்ல.

அடுத்த நாள் வளவு நிறைய பொலிஸ் மார். நான் நின்ற இடம் யானை நின்ற இடம் எல்லாத்தையும் அளந்ததும் எழுதினதும்தான் அவங்கட வேல. வந்தவுடனே அவங்க சொன் னது வீடு அழிஞ்சாலும் பறவால நெல்ல சாப்பிட்டா லும் பறவால பிள்ளையல கூட்டித்து இங்க இருக் காம நீங்க போகவேணும். பிறகு, “யானைக்கு அடிக்கிறதுக்கு எங்கயிருந்து கம்பெடுத்த'' என்று கேட்டிற்று கம்பு கிடந்த இடம், கம்பு விழுந்த இடம் என்று ஒன்றும் விடாம அளந்துத்து போயித்து திரும்பியும் அடிக்கடி வரத் தொடங்கித் தாங்க. என்ன என்று கேட்டதற்கு, “அலியாக்கு அடிச்சநீங்க தானே'' என்று.

ஒரு நாள் வவுணதீவு பொலிஸ் பெரியாளம் என்று ஒருவர் வந்து எனக்கு கைதாராரு

“கெட்டிக்காறி உயிரையும் பொருட்படுத் தாமல் யானைக்கு அடிச்சிப் போட்டாய்'' என்று.

“எனக்கு தப்ப வழி வேணும் என்ன செய்யிற எண்டு தெரியாம தூக்கிற வாக்கில அடிச்சித்தன்'' என்று சொன்னன்.

அவர் அத போய் கொழும்பில ஒரு கூட்டத்தில சொல்லியிருக்கிறாரு.

“நாங்க இருக்கிற ஊரில ஒரு பொம்பிள யானைக்கு விளக்கு மாத்தால அடிச்சிருக்கா'' என்று.

ஒரு நாள் நான் உன்னிச்ச வஸ்சில போறன் ஆயித்தியமலை கேம்பில இருந்து ஏறின பொலிஸ்காரன் ஒருவன் அவன் அந்தக் கூட்டத் திற்கு போயிருக்ககான், வஸ்சுக்குள்ள வந்து எனக்குக் கைதாரான்

“அலியாக்கு அடிச்ச கெட்டிக்காறி'' என்று.

அந்தக் கத எவ்வளவோ தூரம் போயித்து. ஆனா நாங்க தப்பினம் புளைச்சமே என்று தான் இருக்கம். இப்பயும் வந்து யானை வீட்ட உடைக்குது. அதுக் குப் பிறகு ஒரு நாள் யானை வர யானைக்கு திரத்தி எறியிறத்துக்கு நெருப்பு கட்டைய எடுக்கப் போனன். ஆனா அதுக் கிடை யில அது



திரத்தி வந்திற்று. உடனே பனை மரத்த கட்டிப் பிடிச்சித்து அப்படியே நின்டுத்தன். துரத்தி வந்த வர் நானும் நிக்க தானும் அப்படியே நின்று போட்டு பின்னால பின்னால போய் ஜன்னலுக்கு ஒரு அடி.

"இங்க வாழ எங்களுக்கு எல்லா வசதியும் இருக்கு. ஆனா இந்த யானையால மட்டும் தான் தொல்லை. இல்லாட்டி அண்டைக்கு அண்டைக்கு உழச்சி சாப்பிட்டிற்று நிம்மதியா இருப்பம். ஆனா இப்ப வீட்டுக்குள்ள நெல்லு வைக்க முடியல்ல, ஒரு சாப்பாடு வைக்க முடியல்ல யானையால ஒரே தொல்லதான். ஒரு பயிரும் வைக்க முடியல்ல வளவுக் குள்ள வந்து அடியோட பிடுங்கி சாப்பிட்டு சாப்பிட்டு இப்படியே எல்லாத்தையும் நாசமாக்கு துகள். இரவையில எங்களுக்கு நித்திரையே கிடையாது. சாச்சர் லைட்டும் நாங்களும் பட்ட பாடுதான். இரவையில விறாந்தையிலதான் நான் படுக்கிற. பிள்ளையள் வீட்டுக்குள்ள. என்ட முயற்சியிலயும் தையிரியத்திலையும்தான் இங்க இருக்கிற நாலு குடும்பமும் இருக்குதுகள்"

"இப்ப கிட்டடியில ஒரு நாளில எங்கட வீட்டயும் சேர்த்து மொத்தமா 5 வீட்ட உடைச்சிற்று. அண்டைக்கு வெள்ளாமை வெட்டி 28 மூடை நெல்லு வீட்டுக்குள்ள அடிக்கியிருந்தது. அத எடுக்கத்தான், ஜன்னல உடைச்ச. அவர விட வேற ஒரு பெரிய கள்ளனும் இங்க வர முடியாது அவர்தான் எங்கட ஊருக்கு பெரிய தலை. இந்த சம்பவம் எல்லாம் நடக்கக்குள்ள இரவு 11 மணியிருக்கும். அந்த நேரத்தில சத்தம் போட்டாலும் யாருக்கும் விளங்காது கிட்ட கிட்ட வீடுகளும் இல்ல"

"பிள்ளைகளால எங்காலயும் ஓடயும் முடியல்ல. காரணம் எட்டா மாசம் வெள்ளாமைக்காக தண்ணிய திறந்து விட்டிருந்தவங்க. ஆனா யானையாருக்கு தண்ணியெல்லாம் பிரச்சனையே இல்ல. குளத்தில நீந்திற அழக பாக்கணுமே....?"

"நான் சேனைக்காவலுக்கு போனா கொள்ளிக் கட்டய எடுத்து நல்லா நெருப்ப மூட்டி பத்தவைப்பன். பிறகு அந்த கொள்ளி கட்டைய எடுத்து கயித்தில கட்டிப் போட்டு விசிக்கினா பொறி பறக்கும். அந்த கட்டைய மரம் ஒன்றுக்கு எறிஞ்சன் என்டா பொலு பொலு என்டு தணல் கொட்டுப் படும். அத கண்டா கீரிட்டு கத்தித்து ஓடும். தனல் கொள்ளிய எறிஞ்ச வுடனே ஆய் என்டு கத்த பிடிச்சித்தென்டா ஓடிப்போய் காட்டுக்குள்ள பூந்திடும். அதுக்கு இருக்கிற கோவத்தில போகக்குள்ள வழிக்கு எதிரே நிக்கிறதுகள உடைச்சிப் போட்டு போயிரும். அப்போ மரம் எல்லாம் முறிஞ்சு விழுற சத்தம் கேட்கும். அந்த நேரம் மனிசன் யாராவது மாட்டினா சம்பல்தான்"

"நான் சேனை காவலுக்கும் போவன், வயல் காவலுக்கும் போவன். சேனை காவலுக்கு ஆம்பிளையல்தான் வழமயா நிப்பாங்க. எங்கட சேனைக்குள்ள நான்தான் நிக்கிற. காட்டுக்குள்ள இருந்து முள்ள வெட்டி நாலுபக்கமும் போட்டு எல்லை மறிச்சி என்ர சேனைய வைப்பன். சேனைக்குள்ள போய்வாறதுக்கு ஒரு வழி வைச்சிருப்பம். இப்படி எல்லாரும் அவங்கட அவங்கட எல்லைகளை பிரிச்சி வைச்சிருப்பாங்க. பிறகு மரத்துக்கு மேல பரன் போடு வாங்க. இரண்டு மரத்துக்கு நடுவில சிராம்பி அடிச்சிதான் பரன் போடுவம். ஏணி வைச்சி மரத்துக்கு மேல ஏறி நாம இருக்க கூடிய மாதிரி கட்டுவம்"

"பரணை ஆம்பிளைகள் அவங்களுக்கு போட்டுக் கொள்ளுவாங்க. ஆனா எனக்கு நான் தான் போட்டுக் கொள்ளுவன். கிட்ட கிட்ட இரண்டு மரம் எங்கட சேனைக்குள்ள வைச்சிருக்கன். அது இரண்டுக்கும் நடுவில வளைக் கம்பு போட்டு அதுக்கு நாலு கால் நாட்டி மோடு போல விட்டம் போட்டு வீட்டு மெதட்டுக்கே மழைக் கெல்லாம் இருக்க கூடிய விதத்துல கட்டுவன். மரத்துக்கு மேல இருந்து லைட் பிடிச்சா கன தூரத்தில இருந்து வார யானைகூட தெளிவாத் தெரியும்."

**"யானை வருவது தெரிந்தவுடன் நீங்க கீழ இறங்கி வரவேணுமா, உடனே எப்படி நெருப்ப எடுத்து எறிஞ்சி துரத்துவீங்க?"**

"பரன் மேல சிராம்பி தொங்கல் மூலை யில நெருப்பு மூட்டி வைச்சிருப்பம். கம்புக்கு மேல தகரம் போட்டு அதுக்கு மேல மண் போட்டுத்தான் நெருப்பு மூட்டுவம். அப்படி மூட்டுறதால நெருப்பு கம்புக்கு தாவி பிடிக்காது. நித்திர இல்லாம முளிப்பாத்தான் இருக்க வேணும். மேல இருந்து லைட்ட பிடிச்சாலே யானை சேனைக்குள்ள வராது. அதையும் மீறி வந்தா நெருப்பு கொள்ளிய தூக்கி எறிஞ்சா போயிரும். அப்படி செய்து ஒன்டுக்குமே கேக்காட்டி கீழ இறங்கி வெடிய கொழுத்திப் போட்டு, நெருப்புக் கொள்ளிய வீசி, சத்தம் போட்டு, துரத்துவம். எங்கட சத்தத்தில பக்கத்து சேனைக்காராக்களும் வந்திருவாங்க. எல்லாரும் ஒத்து துரத்திக் கொண்டு போய் ஒரு சைட்டில ஒதுக்கி விடுவம். இங்க துரத்தினா அங்க போகும், அங்க துரத்தினா இங்க. இப்ப டியே திரிஞ்சி திரிஞ்சி பயிர அழிச்சிரும். இப்படியே விடிய விடிய அலைச்சல்தான். நித்திரையும் இருக் காது. இரவையில என்ன நேரத்தில யார் போன் எடுத்தாலும் நான் நல்ல முளிப்பா இருப்பன்"

**"இரவையில நித்திர கொள்ளாட்டி அடுத்த நாள் காலையிலாது நித்திர கொள்வீர்களா?"**

"எங்களுக்கு நித்திரையே கிடையாது. அது எங்களுக்கு பழகித்து. ஒரு கொஞ்ச நேரம் நித்திர கொண்டாலும் கண் விறச்ச மாதிரி போயிரும். பாருங்களன் இரவு யானை வந்தது. இரவெல்லாம் யானையாருக்கு சடக்கு சடக்கு என்று நடந்த தும் புல்லு செருக்கினதும்தான் வேல. என்ன அழகாக செருக்கினார் என்று தெரியுமா.. புல்ல புடுங்கி மண்ண காலில தட்டிப் போட்டு, பிறகு மண் இல்லாமதான் சாப்பிடுவார்"

**"இந்த யானை யாரையாவது அடிச்சி கொண்டிருக்கா?"**

"இந்தக் குளத்துக் காட்டுக்குள்ள ஒரு பொடியன போட்டு அங்கையும் இங்கையும் தூக்கி எறிஞ்சி கடைசியா மண்ணுக்குள்ள போட்டு புதைச்சி, பக்கத்தில இருந்த மரமெல்லாம் பிடுங்கி அதையெல்லாம் கொண்டு போய் அவனப் புதைச் சதுக்கு மேல போட்டு வைச்சிருந்தது"

**"ஏன் அவனோட அதுக்கு அவ்வளவு கோவம்?"**

"பகலில ஊருக்குள்ள வந்திருக்கு அப்ப ஆக்கள் துரத்தி போயிருக்காங்க. அது காட்டுக் குள்ள நுழைய அவங்க விட்டுத்து வந்துத்தாங்க. இந்தப் பொடியன் உன்னிச்சைக்கு போக, இந்தக் காட்டுக்கு இடையால போயிருக்கான். அதுக் குள்ளதான் அது நின்டிருக்கு. போனவன புடிச்சி இங்கயிருந்து அங்க, அங்கயிருந்து இங்க என்டு எறிஞ்சி சின்னா பின்னம்மாக்கிப் போட்டுது. அந்த இடத்தின்ர காட்டையே அழிச்சி மரத்தை யெல்லாம் புடுங்கி ஒன்டுமே இல்லாம ஆக்கியி ருக்கு. அந்த இடம் நம்மட வளவுட அகலத்தில முற்றம் மாதிரி இருந்திச்சாம். ஆள கண்டு பிடிச்சது அவன்ர சேட்டில ஒரு சின்ன துண்டில தான்"

**"சேனை எல்லாம் யாரோட போய் வெளியாக் குவீங்க, மகன், மகள கூட்டித்து போவீங் களா?"**

"இல்லை அவங்க சின்னாக்கள்தானே அதனால நான் மட்டும்தான் போறன். ஒரு நாள் சின்ன மகன் "வா நெருப்பு வைப்பம்" என்று கூட்டித்து போனன். சரி வாரன் என்று வந்தான். பிறகு பார்த்தா வந்தவன் மரத்துக்கு கீழ நின்டு போட்டு "இந்த வெயிலுக்குள்ள யாரு நிக்கிற, நீங்க நின்டு வேலய முடிச்சித்து வாங்க, நான் போறன்" என்று சொல்லித்துப் போயித்தான். அவன் சொல்றான், இந்த வெயிலுக்குள்ள நின்டு வேலை செய்ய யாரையாவது சம்பளத் துக்கு புடிங்க" என்று.

**"இரவில் சேனைக்காவலுக்கு நீங்க போகும் போது அவர்களும் கூடவே வருவார்களா?"**

"நான் அவங்க இரண்டு பேரையும் தனிய விட்டுத்து போறதில்ல. கூடவே கூட்டித்து போயிரு வன். பரனில்ல இருந்து நித்திரயில அவங்க கீழ உருண்டு கிருண்டு விழாம ரெண்டு பக்கத்திற்கு கம்ப வைத்து கட்டியிருக்கன்"


நித்திர கொள்ளுற பிள்ளைகள தட்டினா உடனே டக்கென்டு எழும்பிடுங்கள். அதுக ளுக்கும் நித்திரை வராது.

"யானை வந்து மரத்துடன் பிடுங்காதா?"

"யானைய மரத்துக்கிட்ட நெருங்க விடுறது இல்லையே. அதையும் மீறி நெருங்குது என்று தெரிஞ்சா சர சர என்று இறங்கித்து பிள்ளைகளையும் கூட்டித்து ஒரு பக்கமா ஒதுங்கிடுவம்"

**"யானை அடியோட வராம இருக்கிறத்துக்கு ஏதாவது வேற வழிகள் இருக்கா. கரண்ட் வேலி போட்டு இருக்குத்தானே?"**

"அதையும் தாண்டித்தான் யான வருது. கறன்ட் வாற கட்டை நுணியில இல்லாட்டி அடியில பிடிச்சி தள்ளும், அப்படியும் முடியாட்டி மரத்த பிடிங்கிக் கொண்டு வந்து அதுக்கு மேல போட்டுத்து கம்பியில கால் படாம கடந்துத்து வருது;.



அதுக்கு இப்ப எல்லாமே தெரியுது. அத ஒன்றுமே செய்ய முடியல்ல. சுட்டோ கொல்ல முடியாது இவங்கட பாரம்பரிய முறையிலதான் அத துரத்தனும். எங்கட தொழிலுக்கும் வாழ்வாதாரத் துக்கும் சேதத்த தாரண்டா அது இந்த யானக் காரக்கள்தான். நான் எங்க, என்ன கூட்டத்துக்கு போனாலும் சரி கதைக்கிற ஒரே விசியம் யானை தான்.

யானைய மட்டும் இல்லாம செய்தாலே எங்களுக்கு போதும் என்ற அளவுக்கு வந்துத்து. வேற எதுவுமே எங்களுக்கு தேவையில்லை. நாங்க எங்கட ஊரில இருந்தே தொழில் செய்து வாழ்ந்து கொள்ளலாம். இவங்கள கொண்டுபோய் வேற ஒரு காட்டுக்குள்ள கலச்சி விட்டுத்து வந்தம் என்றா அந்த ஏரியாக்குள்ள இருக்கிறவங்களுக்கு சேனை செய்ய முடியாது. இந்த யானை எல்லாம் வேற ஏரியாக்குள்ள இருந்து கலச்சிக் கொண்டு வந்து விட்டதுதான்.

நாங்க எல்லாரும் அகதிகளா இடம் பெயர்ந்து போய் வந்ததுக்கு பிறகுதான் யானை எங்கட ஊருக்குள்ள வரத் தொடங்கியது. நாங்க இடம் பெயர்ந்து போகக்குள்ள 138 மூடை நெல்லு எங்கட வீட்டுக்குள்ள அடிக்கியிருந்தது. வளவுக் குள்ள 48 தென்னை மரம் நின்றது. அதுகளே எங்கட வாழ்வாதாரத்துக்கு போதும். இந்த இடமே அப்ப நிழல் சோலை. அவ்வளவு தென்னை மரத்தையும் அடியோட சாச்சிப் போட்டுதுகள். இங்க நெல்லு மூடை ஒன்றுமே வைக்க முடியாது வைச்சம் என்டா வீட்டோட சேத்து நம்மளையும் அடிச்சிப் போடும். இதனால நாங்க நெல்லை எல்லாம் தாண்டியடியில இருக்கிற எங்க அம்மா வீட்ட கொண்டு போய் போடுவம்".

**"உங்க கையால் அடி வேண்டியவர நீங்க அதுக்கு பிறகு காணவில்லையா?"**

"நான் காணல்ல. ஆனா அவர் வந்து தான் வீட்ட திரும்பவும் உடைச்சிருக்க வேணும் என்டு நினைக்கிறன். ஒரு மனிசன் செத்தா ஒரு கேள்வி பாரி ஒன்றுமே இல்ல. கொண்டு போறம், தாக்கம், வாறம். ஆனா ஒரு யானை செத்தா எவ்வளவு கேள்வி. அந்த குளத்துக்குள்ள ஒரு யானை செத்து கிடந்தது. அதுக்கு அந்த பகுதி யில இருக்கிற எல்லாரையும் கூட்டிக் கொண்டு போய் விசாரிச்சி யானையப் போட்டு ஆயிரம் தரம் சோதிச்சாங்க. கடைசியா சொன்னாங்க, யானைக்கு காச்சல் என்டு. நாங்க செத்தா கேள்வி?... பிள்ளையளிட்ட நான் சொல்லுவன் "என்னட்ட அடி வேண்டினவர் என்னைய அடிச்சி கொல்லுவார் போல, எனக்கு யானையாரிட கையால தான் சாவோ தெரியா" என்று.

நேர்காணல்:
**கல்யாணி விஜயலட்சுமி**



# ஆகாயக் குளங்கள்...

இன்று பல பெண்கள் வெளிநாடுகளுக் குப் பணிப் பெண்களாகச் சென்று கொண்டிருந்தாலும் இங்கிருந்து புறப்படத் தொடங்கியதிலிருந்து மீண்டும் நாடு திரும்பும் வரை பல விதமான துன்பங்களை இப் பெண்கள் அனுபவிக்கின்றனர். பல பெண்களது தொடர்புகளே அற்றுப் போகிறது. ஆகவே இப் பெண்கள் தொடர்பாக பணியாற்றும் பெண்கள் வள நிலையத்தைச் (Women Resource Centre) சேர்ந்த சுமிகா பெரேரா அவர்களை வழங்குனராகக் கொண்டு நடைபெற்ற பயிற்சி வகுப்பில் இருந்து கிடைக்கப்பட்ட தகவல்களை தொகுத்து வெளியீடுகிறோம். இதில் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று நாடு திரும்பியவர்கள், அரசசார்பற்ற, அரசதரப்புப் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**i) ஏன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணியாளர்கள் சார்ந்து தாங்கள் வேலை செய்யத் தொடங்கியுள்ளீர்கள்?**

- பெண்கள் பணிப்பெண்ணாகச் செல்வதற்கான படிமுறைகளில் ஈடுபடும் காலத்திலும் (ஆவணங்கள் பெறல், கையொப்பம் பெறல், அதிகாரிகளைச் சந்தித்தல்) வெளிநாட்டில் பணியாற்றும் காலங்களிலும் அதிக பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர்.
- பெண்கள் வெளிநாட்டுக்குச் சென்று பிரச்சனையை எதிர் கொள்வதுடன் வெளிநாட்டிற்குப் பணியாற்ற ஆண்கள் சென்ற பின்னும், இங்கும் (குடும்பப் பராமரிப்பில்) பெண்கள் பல சிக்கல் களை எதிர்கொள்கின்றனர்.
- யுத்தம் முடிவடைந்துள்ள காலத்தில் பெண்கள் அதன் தாக்கத்தில் இருந்து வெளியேற வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டியுள்ளது.
- வறுமை

- சட்டரீதியற்ற முறையில் செல்லல் (பொய்யான ஆவணங்கள் தயாரித்து வெளிநாட்டிற்குப் பணிப் பெண்களாக அனுப்புதலும் அதனால் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளும்)
- பணிப் பெண்களாகச் சென்ற பெண்கள் பிணங்களாக திருப்பி அனுப்பப்படுதல்.
- நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதில் சிரமம். (உடல், பணம் சார்ந்த இழப்புக் கள்,)
- சம்பளத்தை உரிய காலத்திலோ உரிய சம்பளத்தையோ பெற்றுக்கொள்வதில் சிரமம்.
- முகவருடனும், உப முகவருடனும் எதிர் கொள்ளும் சிக்கல்கள்.

**ii) மத்திய கிழக்குப் பணிப்பெண்கள் என்பவர்கள் யார்? அவர்களை நாம் எவ்வாறு பார்க்கிறோம்?**

இவர்கள் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட வர்களாக இருப்பதுடன் தமது வாழ்வின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டி ருப்பார்கள். இவர்கள் படித்தவர்களா கவும் இருப்பர். எனினும் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியாதிருக்கும்.

**iii) ஏன் பெண்கள் மத்திய கிழக்குப் பணிப்பெண்களாகச் செல்கிறார்கள்?**

பெண்கள் தங்களுக்காக மட்டும் செல்வதில்லை. இவர்கள் தங்கள் மகள்மாருக்கான சீதனம், கல்வி, வீட்டுச் செலவுகள், வீடு கட்டுவதற்கு, கடனைக் கட்டுவதற்கு....

**iv) மத்திய கிழக்குப் பணிப் பெண்களி டம் உள்ள சக்திகள், திறமைகள் என்ன?,**

மத்திய கிழக்குப் பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களை நாம் பாவப்பட்ட வர்களாகவும், பாதிக்கப்பட்டவர்களா கவும் படிக்காதவர்களாகவும் இலகுவில் பாதிப்பிற்குள்ளாகக் கூடியவர்களாகவும் பார்க்கிறோம். ஆனால் நாம் அவர் களை ஏன் சக்திமிக்கவர்களாக பார்ப் பதில்லை.

- உடல் ரீதியாக கடுமையாக வேலை செய்பவர்கள்
- குறுகிய காலத்தில் பல மொழிகளைப் கற்கக் கூடியவர்கள்
- புதிய தொழில் நுட்பங்களையும் புதிய பொருட்களையும் கையாளும் திறமையு டையவர்கள்.
- புதிய அனுபவம் உட்பட புதிய இட அனுபவம்.
- எழுதும் திறன் மேம்பாடடைகின்றது.
- வங்கி அனுபவமும், திறமையும்
- புதிய சமையல் வகைகள்
- வெளிநாட்டுப் பிராயணங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்
- புதிய கலாசாரத்திற்குள் தங்களை உட்படுத்துகிறார்கள்.
- தங்கள் உரிமைக்காக கேள்வி கேட்கத் தொடங்குகிறார்கள், உடன்பாட்டிற்கு வருகிறார்கள் (சம்பளம், வேலை செய்யும் நேரம், உடன்படிக்கை)

**v) வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்ற பெண் கர்ப்பமாகவோ அல்லது அங்கு ஒரு குழந்தையைப் பெற்று மீண்டும் நாட் டிற்குத் திரும்பினால் அதன் படிமுறை?**

இவ்வாறு நிலையையை எதிர் கொண்டு ஒரு பெண் வரும்போது SLBFE யினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "சகானா பியசா" **(sahana piyasa)** எனும் நிலையத்தில் தங்கியிருந்து குழந்தையைப் பிரசவிக்கலாம். இங்கு இக் குழந்தை பதிவு செய்யப்படும். பின்னர் இப் பெண் பிள்ளையை வளர்க்க விரும்பினாலோ அல்லது தத்துக் கொடுக்க விரும்பினாலோ அதனை மேற்கொள்ளலாம். எனினும் இக் குழந் தையை தன்னுடன் வைத்திருக்கும் காலத்தில் சமூகத்தின் பார்வைகளைப் பற்றியும் பெண் தெரிந்திருக்க வேண்டும்.

(வெளிநாட்டு பணிப்பெண்களாகச் சென்று நாடு திரும்பிய பெண்களிடம் உரையாடுகையில்...)

i) "உங்களை நீங்கள் ஒரு பெறுமதி மிக்க நபராக பார்க்கிறீர்களா?

ii) நீங்கள் ஒரு பெறுமதிமிக்க பங்காளராக இந்த சமுதாயத்திற்கு அல்லது உங்களது குடும்பத்திற்கு இருப்பதை உணர்கிறீர்களா? குடும்பத்திற்கு அதிக பணத்தை உழைத்த சிறந்த நபராக நீங்கள் உங்களை உணர்கிறீர்களா?

iii) இந்தச் சமுதாயமும் இந்த நாடும் உங்களை பெறுமதிமிக்கவராக பார்க்கின்றதா?

சமுதாயமும் நாடும் எங்களுக்குப் பெறுமதியளிப்பதில்லை. எங்களது வேலைக்கும் பெறுமதி அளிப்பதில்லை. எங்களது நாட்டுச் சட்டங்களிலும் எங்களுக்கு உதவுவது போன்ற முறைகள் இருப்பதாகத் தெரிவதில்லை. மக்களுக்கும் எங்களுக்கு உதவும் சமூகப் பொறுப்புணர்வும் இல்லை.

எங்களை வேறாக்கிப் பார்க்கும் பார்வையே உள்ளது. திறமைகளை ஒன்றாக்கி பயன்படுத்தும் தன்மை இங்கில்லை.

**குருணாகலைச் சேர்ந்த அலுவலர்** பத்மா கருத்துக் கூறுகையில்,

தான் பணிப்பெண்ணாகச் சென்று நாடு திரும்பிய பெண்களுடன் வேலை செய்வதுடன் பிரதேச செயலாளர், சர்வதேச தொழிளாலர் அமைப்பு போன்ற அமைப்புக்களுடன் இணைந்து வாழ்வாதாரத் தொழில்கள், பயிற்சிகள் போன்ற நடவடிக்கையை இப் பெண்களுக்காக மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். மற்றும் தங்கள் தொழில், எதிர்காலம், இதற்கான திட்டமிடல் போன்ற விடயங்களை பெண்கள் வெளிநாட்டுப் பணிப்பெண்ணாகச் செல்லும் முன்னரே கதைக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்.

பரிந்துரை:

1) பெண்கள் அமைப்புக்கள் இது தொடர்பாக வலையமைப்பாக இயங்க வேண்டும். இதற்கூடாக இவ் விடயம் சார்ந்து முகவர், உப முகவர், வெளிநாட்டுப் பணிப் பெண்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து மதிப்பிடலாம். இத் தகவல்களை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொது இடத்தில் வைக்கலாம்.

இவர்களுக்கான ஓய்வூதியத்திற்கான யூனியன் அமைக்கக் கோரலாம்.

உப முகவர் பற்றி அரசு அதிகம் கண்டுகொள்வதில்லை. இப் பெண்கள் இது சார்ந்து முறையீடு செய்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர் தொடர்பாகவே அரச கட்டமைப்பு கவனத்திற் கொள்ளலாம். எனினும் பதிவு செய்யப்படாத உப முகவர்கள் அதிகம் உள்ளனர்.

உப முகவர்கள் வழமையாக எழுத்தில் உடன்படிக்கைகளை கொண்டிருப்பதில்லை. எனினும் பதிவுசெய்யப்பட்ட முகவரிடம் இது சார்ந்து முறையிடுகையில் அவர்கள் அதனை மறுத்து விடுவார்கள்.

2). வெளிநாட்டுக்குச் செல்லு முன் பெண்கள் கவனிக்க வேண்டியது

முக்கியமான ஆவணங்களின் பிரதிகள் கட்டாயம் வீட்டில் இருக்க வேண்டும்.

முகவரின் பெயர், விலாசம், அவரது பின்னனி (அவர் இதற்கு முன்னர் அனுப்பிய குடும்பங்கள், அவர்கள் நிலை) போன்ற விபரங்களும் அடங்கும்.

சம்பளமும் அதற்கான வேலை ஒப்பந்தங்களும் தெரிந்திருக்க வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப் புப்பணியகத்தின் ஊடாக (SLBFE) பதிவு செய்யப்பட்டுச் செல்ல வேண்டும்.

எந்த நாட்டிற்குச் செல்கிறார்கள் எனத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கட்டாயம் குடும்பக்கட்டுப்பாட்டு தடுப்பு மருந்து போட்டுக்கொள்வதுடன் அதன் பக்க விளைவுகள் தொடர்பாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து வேலை செய்து வந்துள்ள பெண்களிடம் அவர்கள் பெற்ற அனுபவங்களை தெரிந்து கொள்ளுங்கள்.



முகவர், உபமுகவரது, பெயர், விலாசம் போன்ற விபரங்கள் தெரிந்திருக்க வேண்டும். வெளிநாடு சென்ற பெண்களின் அனைத்து ஆவணங்களின் பிரதிகளும் பெண்களது உறவினர்கள் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

வெளிநாட்டுப் பணிப் பெண்களும் (SLBFE) யினரும் நேரடியான சந்திப்புக் கூட்டங் களை ஏற்பாடு செய்தல். இக் கூட்டங்களை பிரதேச செயலகம், அரச அதிபர்களுக்கூடாக நடத்துதல். முகவர்களையும் உள்வாங்குவது நல்லது. குருநாகலில் உள்ளுராட்சி மன்றப் பெண்கள், பெண் அரசியல்வாதிகளும் இக் கூட்டங்களில் உள்வாங்கப்படுகிறார்கள்.

இப் பெண்களின் பிள்ளைகளது நலன் சார்ந்த விடயங்களுக்கு SLBFE யினரை அனுக லாம். ஏனெனில் இப் பெண்களது பிள்ளைகளின் நலன்சார் விடயங்களில் இவர்களுக்கும் ஓர் பொறுப்புள்ளது.

## தொகுப்பு

வெளிநாட்டுப் பணிப் பெண்கள், அவர்கள் குடும்பம், நிறுவனங்கள் அனைவரும் ஒன்றி ணைந்து பணியாற்ற வேண்டும்.

வெளிநாட்டுப் பணிப் பெண்களின் தொழிலின் பெறுமதியை சமுதாயம் உணர வேண்டும். இவர்கள் முக்கியமானவர்கள் என்னும் ஆழமான பார்வை வேண்டும்.

இப் பெண்களின் பிரச்சனை அவர்களது தனிப்பட்ட பிரச்சனை அல்ல என்பதை விளங் கிக் கொள்ள வேண்டும். சமூகத்திற்குள் நாம் வாழ்பவர்கள் என்பதால் இவர்களது பிரச்சனை சமூகப் பிரச்சனை அது ஒவ்வொருவரினதும் பிரச்சனை என்பதை உணர வேண்டும்.

தொகுப்பாளர் : சுமிக்கா பெரேரா (Women Resource Centre)
ஆங்கில மொழிபெயர்ப்பு : கீர்த்திகா

**வலுவான சமூக ஒருமைப்பாட்டுடன் கூடிய பிரக்ஞையை நாம் எல்லோரும் இப் பிரச்சினையின் பால் கட்டியெழுப்பினால் பதில்களைக் கண்டடையலாம் தாமதித்தாவது**

நேயங்களுடன் ஆசிரியைக்கு,

வாழ்தலின் அனைத்துவிதமான நெருக்கடிகளுடனும் வாழ்தலை எதிர்கொண்டாக வேண்டிய தருணம் இது. கண்துடைப்பிற்காக காணாமற் போனோரை விசாரித்தபடி மறுகணமே "மரணச் சான்றிதழ்களும்" பரிமாறப்படும் நாடகத்தை மௌன சாட்சிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதழாசிரியையின் கருத்துப் பகிர்வு அரசியலுக்கு அப்பால், "அரசியல்" என்கிற பெயரால் பெண்களின் வாழ்க்கையும் அதன் நெருக்கீடுகளும் பற்றி மறுபடியும் எம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

"காணாமற் போதல்" என்பது வெறுமனே ஒரு தனிநபரின் இழப்பன்று. அதன் பின்னால் உள்ள ரணங்கள், மனஅவஸ்தைகள், உணர்வு வடுக்கள் எல்லாம் மிகமிக ஆழமானவை. என் சொந்த வாழ்விலும் சகோதரர்கள் இருவரைத் தொலைத்து விட்டு நினைவுகளில் வாழும் செய்தியை இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன். காணாமற் போனோருக்கான 'பிராத்தனை' நிகழ்வு உண்மையில் வரவேற்கத்தக்கது. கூட்டான உண்மையான ஆழ்மனதில் இருந்து எழும் பிராத்தனைக்கு அதிக சக்தியுண்டு.

வைத்தியர் எம்.கணேசனின் யுத்தத்தில் காணாமல் போனோர் பற்றிய சிந்தனைக் குறிப்பில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகள் தாக்கமானவை. பதில்கள் தான் கானலாய்த் தென்படுகின்றன. எனினும் **வலுவான சமூக ஒருமைப்பாட்டுடன் கூடிய பிரக் ஞையை நாம் எல்லோரும் இப் பிரச்சினையின் பால் கட்டியெழுப்பினால் பதில்களைக் கண்டடையலாம் தாமதித்தாவது.**

"மட்டுநகர் கண்ணகைகள்" பற்றிய ஆய்வும் பெண்ணிய அரங்கு பற்றியும், அதன் வீச்சு, சமூகப் பயன் என்பன பற்றி நமக்கு அறியத் தருகிறது. எனினும் பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வுகள், பொதுவில் யந்திரப் பாங்காகவும், வரையறை களுடனும், பட்டங்கள் சூடலுடனும் குறுகித் தவிப்பது துரதிஷ்டமானது என்ற கருத்தையும் (அவலம்?) என்னால் பதிவுசெய்யாமல் இருக்கமுடியவில்லை.

'சொல்லப்படாத கதைகள்', "சொல்ல மறந்த கதைகள்" "சொல்ல முடியாத கதைகள்" "சொன்னாலும் கேட்கப்படாத கதைகள்", "சொல்லாமல் இருக்குமாறு அமுத்தப்படும் கதைகள்" என்று நமக்குள் உள்ள கதைகளின் வடிவமும், வகையும் அளுத்தம்..... "எல்லோருக்குள்ளும் ஒருகதையுண்டு" போருக்கு பிந்திய வாழ்வியல் யதார்த்தத்தின் ஒரு குறுக்கு வெட்டு முகம்.

கமலா வாசுகியின் எழுத்தோவியம் வழமைபோலவே வீரியத்துடன் இன்றைய சமூக வக்கிரத்தின் மறுபக்கங்களை மிகுந்த பொறுப்புணர்வுடன் பதிவு செய்துள்ளார். பெண்ணைத் தெய்வ பீடத்தில் ஏற்றி வழிபடும் சமூகம், அவளை உடல் இன்பத்தின் பண்டமாகவும் கருதுவதோடு, தவறுகளின் விளைவுகளை அவள் மீது மட்டுமே சுமத்தும் "பண்பாட்டு நுகத் தடிகளின்" பாராபட்சமான அளவுகோல் தொடரும் வரை, "பாம்புப் புற்றாக உடல் கனக்கும்" பெண் மன ஓலங்கள் தொடரவே செய்யும்.

பராமரிப்பு, முறைசாரா பொருளாதாரத் திட்டம் அல்லது பெண்களின் பராமரிப்பு பொருளாதாரம் தொடர்பில் இன்று உலகின் கவனம் திரும்பியுள்ள காலகட்டத்தில் 'பெண்' சுமந்துவந்த குறிப்பு ஆய்வாளன் என்ற வகையில் எனக்கும் பயன் மிக்கதாக அமைந்திருந்தது.

வளர்ந்து வரும் மென் பயன்பாட்டு உருவாக்குனரின் கதை, மரபு சாராத அல்லது ஆண்களுக்குரியதான துறைகளிலும் இன்றைய பெண்களின் முனைப்பான ஈடுபாட்டைப் புலப்படுத்தியதோடு ஏனைய யுவதிகளுக்கும் உந்துசக்தியாக அமையக் கூடும்.

மகாகவி பாரதியின் மகுட வாசத்துடன் எடுத்து ஆராயப்பட்டுள்ள காணிப் பிரச்சினை "பெண்களின் நிலம்" எனும் சூரியாவின் முன்னைய பிரசுரத்தினை எனக்கு ஞாபகமூட்டியது. இப் பிரச்சினையின் பால் நிறைந்த அநுபவம் மிக்கது. குருநாதன் அவர்கள் இது பற்றிய சமூக விழிப்புணர்வுக்கும் தன்னை அர்ப்பணித்தால் நல்லது.

மொழிவரதனின் சிந்தனைப் பொறிகள் பெண்ணியத்தின் பால் அவர் கொண்டுள்ள ஆழமான ஈடுபாட்டைப் புலப்படுத்தியது. இன்னும் ஆழமாக அவரின் எண்ணப் பதிவுகள் தொடரட்டும்.

ஸர்மிளா ஸெய்யித் பற்றிய அறிமுகக் குறிப்பு, அவரின் தீவிரமான, ஆழமான பெண்நிலைப் பிரக்ஞையுடன் கூடிய எழுத்தார்வத்தை மட்டுமன்றி, பெண் எனும் தன் உணர்வுடன் கூடிய வாழ்வுக்கு மிக நெருக்கமான அவரின் விசுவாசத்தையும் துல்லிய மாக வெளிப்படுத்தியது. மரபுகள், அசமத்துவமான பண்பாட்டுக் கவசங்களிடை இத்தகைய மாற்றுக் குரல்கள் சற்று நம்பிக்கை தருகிறது. அவரின் கவிதை கூட எவ்விதமான பூச்சுக்களும் இன்றி தனது உணர்வுகளை ஒரு அருவியின் ஓட்டம் போல இயல்பாக பதிவுசெய்துள்ளது. ஸர்மிளா எத்தகைய சூழல் நெருக்கடி வந்தாலும் உங்களைச் சமரசப்படுத்திக் கொள்ளாதீர்கள். ஸர்மிளாக்கள் "இன்னும் பலர் நம் சமூகத்தில் உள்ளனர்." 'பெண்' அவர்களைத் தொடர்ந்து அடையாளம் காணவேண்டும்.

மத்தியஸ்த சபை *(Mediation Board)* அடிப்படை நிர்வாக அலகு எனினும் அதில் பெண்களின் வகிபாகமும், ஈடுபாடும் முக்கியமானது. இத்தகைய பெண் நிர்வாகிகளை அறிமுகப்படுத்துவதும் நல்ல முயற்சி எனக் கருதுகிறேன்.

சம்மாந்துரை மஹுறா – தனக்கு வாலாயமான கவிதை மொழிக்கும் அப்பால் எளிமையாகவும், யதார்த்தமாகவும் படைத்துள்ள "தராசு" சிறுகதையும் மனதில் பதிந்தது.

பெண் சஞ்சிகை பற்றிய தம்பிலுவில் ஜெகாவின் குறிப்புரை மிக முக்கியமான ஒன்று எழுத்தாளும் பெண்களிற்கான "இலக்கியவெளி" மிகச் சரியாக, நிறைவாக வழங்கப்படுகிறதா என்பது இன்றைக்கும் கேள்விக் குறியே. இவ்விடயம் பற்றி இன்னும் ஆழமான, முழுமையான ஓர் ஆய்வை காலம் கை கொடுக்கும் போது –வரையும் எண்ணமும் உண்டு என்னிடம்.

கருப்பொருளின் இயைவு நோக்கி எனது கட்டுரையை பிரசுரித்து உதவியமைக்கு இதய பூர்வமான நன்றிகள்! விஜயலெட்சுமியின் கவிதைகள் எளிமையாகவும், வாழ்வியல் அநுபவ வெளிப்பாடுகளாகவும் வாழ்தலின் "வலியைச்" சொல்லி நிற்கின்றன. "வெளிறிப்

போன கிழக்கு'' வார்ப்பிலும், சொல்லும் முறையிலும் வெற்றிபெற்றுள்ளது. குமாரி குமாரகேயின் கவிதையும் ரசிக்கும் படியாய் இருந்தது.

அன்பான வாழ்த்துக்களுடன்

**சந்திரசேகரன் சசீதரன்**
சமூகவியல் துறை
கிழக்குப் பல்கலைக் கழகம்

மதிப்பிற்குரிய

"பெண்" சஞ்சிகை ஆசிரியை அவர்களுக்கு எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் சஞ்சிகை தரமான கருத்தாழம் மிக்க சமகாலத்திற்கு ஏற்றவகையில் ஆக்கபூர்வமான ஆக்கங்களை சுமந்து வருகின்றது என்றால் மிகையாகாது. இன்றைய பெண் சமூகம் ஆறாத ரணமாய் கொல்லும் வேதனைகளோடு வெளியில் சொல்ல முடியாமல் குமுறிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த பனுவல் எம் பெண்ணினத்தை சற்றேனும் விழிப்புணர்வூட்டும் என்பது எனது நம்பிக்கை ஆகும். "பெண்மை மேன்மையுற வேண்டும்" என்பது எனது அவா! அத்துடன் தங்க ளைப் போன்ற படைப்பாளிகள் எமக்கு கிடைத்தது எம் பெண்ணினத்திற்கு வெற்றியே!

**எஸ். ரேகா சிவப்பிரகாசம்**

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
**US$ - 8**
இந்தியா
ரூபா 500.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 20................**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

பெயர் : ..............................................................
விலாசம் : ..............................................................
திகதி : ..............................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.


**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல. 55, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No:55, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
இல. 20, லேடி மனிங் டிரைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

Suriya Women's Development Centre,
No.20, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka



பறக்கும் நினைவுடன்
ஆசையில்
படபடக்கும் என் சிறகுகள்

சூடானகாற்றின்
இதம் தேடி.....
நத்தைகளும் நண்டுகளும்
காலெல்லாம் ஊரும்.

இதுவரை,
எனைச் சுமந்து
பறக்காதசிறகுகளுடன்..
முயற்சிகள் தொடர....

மீண்டும் விரியும்
என் சிறகுகள்
படபடப்பாய்....

ISSN : 1391-6122